Annual Subscription Rs. 90/-

# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர்-23 இதழ் - 02 பிப்ரவரி 2010

தனிப் பிரதி ரூ. 8/-



**கிறிஸ்துவின் சபை**

காங்கயம் 638 701. தமிழ்நாடு. இந்தியா.

04257 - 230030, 98427 - 30382, 99655 - 30385

e-mail : Kangayamcofc@eth.net.

# "துருவின் சாட்சி"

(Rust as a witness)

"கர்த்தருக்குக் கொடுத்தல்" பற்றி சத்தமாகவும், உபதேச சுத்தமாகவும் பேசும் 120 பக்கங்கள் கொண்ட புதிய நூலை அழகாக அச்சிட்டு சமீபத்தில் வெளியிட்டிருக்கிறோம்.

பரலோக பாக்கியத்தை மனமார வாஞ்சிக்கும், ஒவ்வொரு கிறிஸ்தவரின் கையிலும் இருக்க வேண்டிய மிக அவசியமான நூல்.

இப்புத்தகம் வேண்டுவோர் தபால் செலவுக்கு ரூ. 50/- மணியார்டர் செய்து பெற்றுக் கொள்ளலாம்.

— ஆசிரியர்.

# ஆசானின் அறிவுரையில் ...


1. ஆசிரியர் உரை ........ 1
2. நாம் கிறிஸ்தவர்களாக ஆகாமல் இருந்திருந்தால் எங்கே இருந்திருப்போம்? ........ 8
3. பெண்கள் பகுதி ........ 11
4. வாலிபர் பகுதி ........ 15
5. சிறுவர் பகுதி ........ 18
6. ஒருவர் எப்படி பரிசுத்தவானாகிறார்? ........ 20
7. கொடுப்பது சம்பந்தமான மனப்பான்மைகள் ........ 22
8. துன்பப்படும் கர்த்தருடைய தாசன் ........ 26
9. கிறிஸ்து சொல்லுகிறபடி நீங்கள் செய்யாமற் போகிறதென்ன? ........ 28
10. எனக்குப்பின் சென்று வா ........ 31

# THIRUMARAI AASAAN

S. Rajanayagam
Editor

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

Pleading for the restoration of pure New Testament Christianity

**Vol. 23 FEBRUARY - 2010 Issue - 2**



## " திருமறை தியானம் "

தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்
இப்பொழுது

**பொதிகை TV-யிலும்**

நம்முடைய இந்நிகழ்ச்சியை
இந்தியத் துணைக் கண்டம் முழுவதிலும்
**செவ்வாய்கிழமை** தோறும்
**அதிகாலை 5:30 - 6:00 மணி**
வரையிலும் பார்த்துப் பரலோக பாக்கியம் பெறலாம்.

வெளி மாநிலங்களிலுள்ள
உங்கள் உறவுகளுக்கும், நண்பர்களுக்கும்
இந்நிகழ்ச்சியை அறிமுகம் செய்யுங்கள்.

– ஆசிரியர்

நிருவன ஆசிரியர் உரை

# வாழ்க்கையின் துயரங்களோடு கர்த்தரைச் சேவித்தல்

நம்முடைய வாழ்க்கையில் இருக்கிற குறைவுகள், ஏற்படுகிற துன்பங்கள் அநேக சமயங்களில் நம்மைச் சோர்வடையச் செய்து வாழ்க்கையைக் கசப்பாக்கிவிடுகிறது. நமக்குத்தான் ஊரில் இல்லாத துன்பங்களும், பிரச்னைகளும் இருக்கின்றன. மற்றவர்கள் எல்லாம் எவ்வளவோ மகிழ்ச்சியாயிருக்கிறார்கள். இத்தனைக்கும் அவர்கள் தேவபக்திக்குரிய காரியங்களை இகழ்ந்தும், அசட்டை செய்தும் தங்கள் இச்சைகளுக்கேற்றபடி வாழ்கிறார்கள். சொத்துமேல் சொத்து சேர்க்கிறார்கள். எடுத்த காரியங்களை வெற்றியோடு முடிக்கிறார்கள். சர்வமும் நிறைந்து காணப்படுகிறது என்றெல்லாம் எண்ணி, நாம் கடவுளைப் பற்றிக்கொண்டிருப்பதால் என்ன நன்மையைக் கண்டடைந்தோம் என்று புலம்புகிறோம். தயவு செய்து 73-ம் சங்கீதத்தை ஜெபத்துடன் வாசித்துச் சிந்தியுங்கள்.

வாழ்க்கையில் ஏற்படும் கஷ்டங்களும், துன்பங்கள் யாவுமே தீமையானவைகள் என்று ஒட்டுமொத்தமாக நினைத்து விடக் கூடாது. பூச்சி, புழுக்கள் எல்லாம் பயிர்களை அழித்து நாசம் செய்து விடுகின்றன என்று பொதுவாக நாம் எண்ணிக் கொண்டிருக்கிறோம். ஆனால், சில வகைப் புழுக்கள் பயிர்களுக்கு மிகவும் உபயோகமான பணிகளைச் செய்கிறதாக விவசாய நிபுணர்கள் சொல்லுகிறார்கள். அதுபோல சில துன்பங்களும், கஷ்டங்களும் வாழ்க்கையில் நாம் வெற்றி அடைவதற்கு இன்றியமையாதவைகள் என்று அறிந்து ஆறுதல் அடைய வேண்டும்.

நம்முடைய வாழ்க்கையை செம்மைப்படுத்துவதற்கு தேவன் சில வேளைகளில் நம்மைச் சிட்சிக்க வேண்டியிருக்கலாம். ஓர் அறுவைச் சிகிச்சை நிபுணர் தன் நோயாளிகளில் ஒருவரைப் பார்த்து நான் உம்மைக் காயப்படுத்த வேண்டி வரலாம். ஆனால், உம்மை வேதனைப்படுத்தமாட்டேன் என்றாராம். ஆம், நம்மை பரிசுத்தப்படுத்துவதற்கு தேவன் நம்மைக் காயப்படுத்த நேரிடலாம். ஆனால், நிச்சயமாக வேதனைப்படுத்தமாட்டார். இதை எபிரெய ஆசிரியர் விளக்கும் போது, அன்றியும் நம்முடைய சரீரத்தின் தகப்பன்மார்கள் நம்மைச் சிட்சிக்கும் போது, அவர்களுக்கு நாம் அஞ்சி நடந்திருக்க, நாம் பிழைக்கத்தக்கதாக ஆவிகளின் பிதாவுக்கு வெகு அதிகமாக அடங்கி நடக்க வேண்டுமல்லவா?.

அவர்கள் தங்களுக்கு நலமென்று தோன்றினபடி கொஞ்ச காலம் சிட்சித்தார்கள். இவரோ நம்முடைய பரிசுத்தத்துக்கு நாம் பங்குள்ளவர்களாகும் பொருட்டு நம்முடைய பிரயோஜனத்துக் காகவே நம்மை சிட்சிக்கிறார்.

எந்த சிட்சையும் தற்காலத்தில் சந்தோஷமாய்க் காணாமல் துக்கமாய்க் காணும். ஆகிலும் பிற்காலத்தில் அதில் பழகினவர் களுக்கு அது நீதியான சமாதான பலனைத் தரும் என்கிறார். (எபி 12:9-11). சிட்சையை அதாவது கடிந்து கொள்ளுதலை எல்லா ருமே விரும்புவதில்லை. ஆனால், அது கர்த்தருடைய பரிசுத் தத்துக்கு நம்மை பங்களியாக்குகிறதே.

நமக்கு நேரிடும் போதனைகளைக் குறித்து பேதுரு கூறும் போது, அழிந்து போகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப் படும், அதைப் பார்க்கிலும் அதிக விலையேறப் பெற்றதாயிருக் கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு இயேசு கிறிஸ்து வெளிப் படும் போது உங்களுக்குப் புகழ்ச்சியும், கனமும் மகிமையும் உண்டாகக் காணப்படும் என்கிறார் (1பேதுரு. 1:7).

நாம் கிறிஸ்துவுக்காகப் படுகிற துன்பங்கள் ஒரு போர் வீரன் யுத்தத்தில் பெறும் விழுப்புண்களுக்குச் சமமானது. அப்போஸ்தலன் பவுல் கலாத்தியருக்கு எழுதும் போது இனி மேல் ஒருவனும் எனக்கு வருத்தமுண்டாக்காதிருப்பானாக; கர்த்தராகிய இயேசுவினுடைய அச்சடையாளங்களை நான் என் சரீரத்திலே தரித்துக் கொண்டிருக்கிறேன் என்று கூறுகிறார். (கலா 6:17) தான் கிறிஸ்துவுக்காக பாடுபட்டதினால் ஏற்பட்ட தழும்பு களை மனதில் கொண்டு இப்படி எழுதுகிறார். பழைய ஏற்பாட் டில் யோனாவின் எட்டு வார்த்தைப் பிரசங்கம் நினிவே பட்டணத்து மக்களையும், அரசனையும் உலுக்கியதே, அதற்கு காரணம் என்னவென்று நினைக்கிறீர்கள்? யோனா திமிங்கலத்தால் விழுங் கப்பட்டபோது அதன் ஜீரண அமிலத்தால் அவன் கூழாகாமல் தப்பின விந்தை அவர்கள் காதுகளுக்கு எட்டியிருக்கலாம். அல்லது அவன் மூன்று நாட்களுக்குப் பிறகு கடற்கரையில் திமிங்கலத்தால் வாந்தி பண்ணப்பட்டதை அப்பட்டணத்தாரில் எவராவது ஒருவர் பார்த்து விட்டுப் போய் அதை ராஜாவிடம் அறிவித்திருக்கலாம். நமக்குச் சரியாய் தெரியவில்லை. ஆனால், ஒன்று நிச்சயம் அவனுடைய வாழ்க்கையில் நடந்த இந்த அற்புத சம்பவமும், அதனால் அவன் அடைந்த துன்பங்களும் அதன் விளைவாக அவனுடைய வாழ்க்கையில் ஏற்பட்ட மாற்றமும் தான் அந்த மக்களை மனம் திரும்ப வைத்தது என்று துணிந்து கூறலாம். துன்பத்தைப் பற்றி நமக்குப் பட்டறிவு இல்லாமல் மற்ற வர்களைத் தேற்றுவதும் மாற்றுவதும் எப்படி? ஆகவே நமக்கு ஏற்படும் துன்பங்களையும், பாடுகளையும் கண்டு துவண்டு போகக்கூடாது.

சில பேர் குறிப்பாக பெண்கள் தாங்கள் அழகாக இல்லையே! என்று குறைப்பட்டுக் கொள்கின்றனர். புற அழகை விட அக அழகே சிறந்தது. அழகுள்ளவர்களெல்லாம் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள் என்று எண்ணிவிடக்கூடாது. கொஞ்ச நாட்களுக்கு முன்பு பேரும், புகழும், பணமும் படைத்த ஒரு சினிமா நடிகை தற்கொலை செய்து கொண்டதாக செய்தித் தாள்களில் வாசித்தேன். அவளுடைய அழகும், பேரும் புகழும், பணமும் அவளுக்கு வாழ்க்கையில் நிம்மதியைத் தரவில்லை என்பது தானே அவள் அகால மரணம் கூறுகிற சோகக் கதை. ஆகவே, புற அழகைப் புறக்கணிக்க வேண்டும் என்று அப்போஸ்தலன் பேதுரு அறிவுரை கூறுகிறார். மயிரைப் பின்னி, பொன் ஆபரணங்களை அணிந்து, உயர்ந்த வஸ்திரங்களை உடுத்திக் கொள்ளுதலாகிய புறம்பான அலங்கரிப்பு உங்களுக்கு அலங்காரமாயிராமல் அழியாத அலங்கரிப்பாயிருக்கிற சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கிற குணமே உங்களுக்கு அலங்காரமாயிருக்கக்கடவது; அதுவே தேவனுடைய பார்வையில் விலையேறப் பெற்றது என்கிறார். (1 பேது 3:2-4). நீதிமொழிகளிலும், சௌந்தர்யம் வஞ்சனையுள்ளது; அழகும் வீண். கர்த்தருக்குப் பயப்படுகிற ஸ்திரீயே புகழப்படுவாள் என்று அழகின் மாயையையும், புத்தியில்லாமல் வெறும் அழகு மட்டும் இருக்கிற பெண்களை ஒப்பிட்டு கூறும் போது பன்றியின் மூக்கிலுள்ள பொன் மூக்குத்திச்சமானம் என்று இடித்துரைக்கிறது. (நீதி. 11:22).

நமக்கு அடுக்கடுக்காய் உபத்திரவங்கள் வரும்போது யோபின் மனைவியின் மனநிலை ஏற்பட்டு விடுகிறது. (யோபு 2:9) ஆனால் அதை முயன்று வென்று யோபுவின் மனநிலைக்கு வரப் பிரயாசப்பட வேண்டும் (யோபு 2:10) பல நூற்றாண்டுகளாகியும் யோபின் சகிப்புத் தன்மையும் பொறுமையும் பலராலும் பாராட்டப்படுகின்றன. (யாக். 5:11) பவுல் கூறுவதைக் கேளுங்கள். உபத்திரவம் பொறுமையையும், பொறுமை பரீட்சையையும் (மனத்தின்மை) பரீட்சை நம்பிக்கையையும் உண்டாக்குகிறதென்று நாங்கள் அறிந்து உபத்திரவங்களிலேயும் மேன்மை பாராட்டுகிறோம் என்கிறார் (ரோமர் 5:3-4).

மனிதனுடைய இயலாமையே கர்த்தர் கிரியை செய்வதற்கு உரிய பக்குவமான பதம் என்று நாம் அறிய வேண்டும். இயேசு அப்போஸ்தலனாகிய பவுலிடம் கூறியதைக் கவனியுங்கள். என் கிருபை உனக்குப் போதும், பலவீனத்திலே என் பெலன் பூரணமாய் விளங்கும் என்கிறார் (2கொரி 12:9) அதனால் பவுல் ஆறுதல்

அடைந்து அந்தப்படி நான் பலவீனமாயிருக்கும் போதே பலமுள்ளவனாயிருக்கிறேன். ஆகையால் கிறிஸ்துவினிமித்தம் எனக்கு வரும் பலவீனங்களிலும், நிந்தைகளிலும், நெருக்கங்களிலும், துன்பங்களிலும், இடுக்கண்களிலும் நான் பிரியப்படுகிறேன் (2 கொரி 12:10). தேவன் பலவீனமுள்ளவரோடு சேர்ந்து பணியாற்ற விரும்புகிறார். உங்களுடைய பலவீன நிலையே தேவன் பெரிய காரியங்களைச் செய்வதற்கு உங்களை பயன்படுத்துவதற்கு ஏற்ற பக்குவமான நிலையாக இருக்கலாம்.

சிலருக்குத் தாங்கள் ஐசுவரியவான்களாக இல்லையே என்ற மனக்குறை உண்டு. சகோதரர்களே, ஐசுவரியம் வஞ்சனையுள்ளது. பல நற்பண்புகளை அடகு வைத்துத்தான் ஒருவன் செல்வந்தனாக முடியும். ஆகவே, செல்வம் சேர்க்கும் ஆசையே கூடாது. அமெரிக்காவில் ஈவர்க்குயூகர் என்றொரு மிகப்பெரிய பணக்காரன் வாழ்ந்தானாம். வங்கிகளை ஏமாற்றியும், வேறு பல மோசடி வேலைகளிலும் ஈடுபட்டும் கோடிக்கணக்கில் பணம் சேர்த்தானாம். நாள் ஒன்றுக்கு பல மில்லியன் டாலர்கள் வருமானம் வந்ததாம். அவன் காலத்தில் உலகில் எந்த ஒரு பகுதியிலும் அவனை விட அதிக வருமானம் பெறக்கூடிய நபர் வேறு எவரும் இல்லை என்று ஊரே பேசிக் கொண்டது. ஆனால், அவனோ பல இரவுகளை தூக்கமில்லாமல் கழித்து இறுதியில் தற்கொலை செய்து கொண்டு மாண்டு போனான். என்னே பரிதாபம்! பிரசங்கி இதைக் குறித்து எவ்வளவு தெளிவாய் சொல்லியிருக்கிறார் என்று பாருங்கள். தேவன் தமது பார்வைக்கு நல்லவனாய் இருப்பவனுக்கு ஞானத்தையும், அறிவையும், இன்பத்தையும் அளிக்கிறார். பாவஞ் செய்கிறவனுக்கோ, தமது பார்வைக்கு நல்லவனாயிருக்கிறவன் வசமாய் வைத்து விட்டுப் போகும் பொருட்டுச் சேர்த்து வைக்கும் தொல்லையை அவர் நியமித்திருக்கிறார். (பிர. 2:26) இதையெல்லாம் மனதில் கொண்டு தான் பவுல் அடியார் கூட போதுமென்ற மனதோடு கூடிய தேவபக்தியே மிகுந்த ஆதாயம் என்றும், பண ஆசையே எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது. சிலர் அதை இச்சித்து விசுவாசத்தை விட்டு வழுவி அநேக வேதனைகளால் தங்களை உருவக்குத்திக் கொண்டிருக்கிறார்கள் என்று அறிவுறுத்தி எச்சரிக்கை செய்கிறார். (1தீமோ 6:6,10).

இறுதியாக, நீங்கள் உண்மை மனதோடு ஆண்டவருடைய பணியில் ஈடுபடும் பொழுது மாயம்பண்ணி பொருளாசையுடையவர்களாய் மனிதரைப் பிரியப்படுத்தும் நோக்கத்தோடு செயல்படுகிற கள்ள சகோதரர்களிடமிருந்து பலவிதமான எதிர்ப்புகள் வரக்கூடும். இதைக் குறித்து நீங்கள் ஆச்சரியபட்டுக் கலங்க வேண்டியதில்லை. இது இன்றைக்குப் புதிதாக முளைத்த பிரச்சனை அல்ல. காலமெல்லாம் தொடர்ந்து நடைபெறுகிற சாத்தானின்

திருவிளையாடல்கள்தான். மாறாக, இவைகளைச் சந்தித்துப் பொறுமையோடு இவைகளை மேற்கொள்ள நாம் முயற்சிக்கும் போது நீடிய சாந்தமும் பொறுமையும் நமக்கு ஏற்படுகிறது. கர்த்தரின் சகோதரனாகிய யாக்கோபு இதைப்பற்றிச் சொல்லும் போது என் சகோதரரே! நீங்கள் பலவிதமான சோதனைகளில் அகப்படும் பொழுது, உங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்கும் என்று அறிந்து அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள். நீங்கள் ஒன்றிலும் குறைவில்லாத வர்களாயிராமல், பூரணராயும், நிறைவுள்ளவர்களாகவும் இருக்கும்படி பொறுமையானது பூரண கிரியை செய்யக் கடவது என்று கூறுகிறார். (யாக். 1:2-4) சிலவேளைகளில் நாம் பரம இராஜ்ஜியத்துக்குள் பிரவேசிப்பதற்கு உரிய சில தகுதிகளை அடைவதற்கு சோதனைகள் உதவியாக இருக்கின்றன என்கிறார். பேதுரு அழைத்தவராயிருக்கிற சகல கிருபையும் பொருந்திய தேவன் தாமே கொஞ்சகாலம் பாடநுபவிக்கிற உங்களைச் சீர்ப் படுத்தி நிலை நிறுத்துவாராக என்கிறார். (1பேதுரு 5-10).

வாழ்க்கையில் நமக்கு நேரிடுகிற கஷ்டங்களும், துன்பங்க ளும் நமக்கு நன்மையே செய்கின்றன. ஒவ்வொரு குறையும் நம்மைக் கடவுள் பக்கமாக இழுத்துச் செல்கிறது. கிறிஸ்துவினி மித்தம் நமக்குப் பலவிதமான நிந்தைகள் ஏன் மரணமே சம்பவிப் பதாயிருந்ததாலும் நாம் நீடிய பொறுமையோடு அவற்றைச் சகித்துக் கொள்வது கர்த்தருக்குப் பிரியமான பண்பு என்று கிறிஸ் தவ நெறி நமக்குப் போதிக்கிறது.

ஆகவே, நாம் செய்ய வேண்டியது, நம்மைச் சுற்றியுள்ள மக்கள் கூட்டத்தைப் பார்த்து ஆறுதல் அடையப் பழகிக் கொள்ள வேண்டும். பலர் பல்வேறு நிலைகளிலிருந்து தேவனுடைய பிள்ளைகளாகும்படி அழைக்கப்பட்டிருக்கிறார்கள். அவரவர் நிலையில் உண்மையுள்ளவர்களாக மன அமைதலோடு கர்த்த ருடைய பாதையில் பொறுமையோடே ஓட வேண்டும். கொரிந்து திருச்சபைக்குப் பவுல் அப்போஸ்தலன் வரைந்த முதல் நிருபத் தின் 7-ம் அதிகாரம் 17 முதல் 24 வசனங்களை வாசித்து அதன் கருத்தைச் சிந்தித்துத் தெளிவு பெறுவோமாக! ஆமென்.



**ந**மது "திருமறை ஆசான்" மாத இதழின் நிறுவன ஆசிரியர் மரியாதைக்குரிய **சகோ. E.Z. செல்வநாயகம் ஐயா** அவர்கள் மறுமைக்குள் பிரவேசித்து (9.2.1993) 17 ஆண்டுகள் நிறைவடைவதால், அவர் நினைவாக அவர் எழுதிய "ஆசிரியர் உரை " உங்களுக்காக வெளியிடப்படுகிறது.

– ஆசிரியர்

*ஜெபியுங்கள்!* *பங்கு பெறுங்கள்!!*

# பதிமூன்றாம் வேனிற்கால வேதாகம முகாம்
## மற்றும்
# "திருமறை தியானம்" நேயர்கள் & "திருமறை ஆசான்" வாசகர்கள் கருத்தரங்கம்

**இடம் :**

**YMCA வளாகம், ஏலகிரிமலை (வேலூர் மாவட்டம்)**

**நாள் : மே மாதம் 3,4,5, - 2010 (திங், செவ், புதன்)**

*சிறப்பம்சங்கள்*

- ✤ கோடையின் கொடுமையிலிருந்தும், வழக்கமான வாழ்க்கை முறையிலிருந்தும் விடுபட்டு, தேவ சமூகத்தில் காத்திருக்க ஓர் அருமையான வாய்ப்பு.
- ✤ தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து வருகைதரும் பரிசுத்தவான்களோடு சங்கமிக்கும் சந்தர்ப்பம்.
- ✤ ஆன்மீக வளர்ச்சிக்கு வழிகோலும் தேவச் செய்திகள்.
- ✤ பக்திப் பரவசமூட்டும் பாடல்கள்.
- ✤ கோடை வாசஸ்தலம் – சமச்சீரான தட்ப வெப்பம்.
- ✤ வாலிபர்கள், பெண்கள், சிறுபிள்ளைகளுக்கென தனித்தனி வகுப்புகள்.
- ✤ குடும்பமாகவும், குழுவாகவும் தங்குவதற்கு தனித்தனி அறைகள்.
- ✤ பெண்களுக்கு தனி இடவசதி.

**உணவும், தங்குமிடமும் இலவசம்**

**பதிவுக் கட்டணம்**

**பெரியவர்கள் ரூ. 100 /- சிறியவர்கள் ரூ. 50 /-**

## கிறிஸ்துவின் சபை

288, தாராபுரம் ரோடு, காங்கயம் – 638 701.
PH. : 04257 - 230603 Cell : 98427 - 30382, 99655 - 30385

**குறிப்பு : சுமார் 400 பேர் மாத்திரமே தங்க இட வசதி உண்டு. ஆகவே பணம் M.O. செய்து முன் பதிவு செய்து கொள்ளுங்கள்.**

# நாம் கிறிஸ்தவர்களாக ஆகாமல் இருந்திருந்தால் எங்கே இருந்திருப்போம்?

நாம் கிறிஸ்தவர்களாக ஆகாதிருந்திருந்தால் மற்றும் கர்த்தருடைய சபையின் அங்கத்தினராக இல்லாதிருந்தால் நாம் எங்கே இருந்திருப்போம் என்பதைப் பற்றி எப்பொழுதாவது ஆச்சரியப்பட்டிருக்கிறீர்களா? நாம் கர்த்தருக்கு கீழ்ப்படியாமல் இருந்திருந்தால், அவர் நம்முடைய வாழ்க்கையை மாற்ற நாம் இடங்கொடுக்காமல் இருந்திருந்தால், இன்று நாம் யாராக இருப்போம்? நாம் எங்கே இருந்திருப்போம்? நாம் என்ன செய்து கொண்டிருப்போம்? நாம் உயிரோடாவது இருந்திருப் போமா?

அப்போஸ்தலர்களையும், வேதாகமத்தின் புகழ் பெற்ற மனிதர்களையும், மனுஷிகளையும் பாருங்கள்; தேவனுடைய மிகச் சிறந்த ஊழியக்காரர்களைப் பாருங்கள், அவர்களைப் பற்றிய சம்பவங்கள் தேவனுடைய புத்தகத்தில் எழுதப்பட்டிருக் கிறபடியால், அவர்கள் பல நூற்றாண்டுகள் உருண்டோடிய பின்னும் புகழ்பெற்று காணப்படுகிறார்கள். அவர்கள் தங்கள் ஜீவியங்களை கர்த்தருடைய சித்தத்திற்கு ஒப்புக்கொடுக்காமல் போயி ருந்தால் அவர்களுக்கு என்ன நடந்திருக்கும்?

உதாரணமாக, மனித இனத்தின் மாபெரும் வரலாற்றை எடுத்துக்கொண்டால், கர்த்தர் இல்லாமல் சாதாரணமாக மீன் பிடித் தொழிலில் ஈடுபட்டிருந்த பேதுருவுக்கு எந்த முக்கியத்துவ மும் கிடைத்திருக்காது. சவுல் மனமாற்றம் அடையாமல் இருந் திருந்தால், அவருடைய முடிவு என்னவாக இருந்திருக்கும்?

இவர்கள் ஆரம்பத்தில் கர்த்தருக்கு கீழ்ப்படிந்தது மாத்திர மல்ல, இவர்களுடைய உண்மைத்தன்மையும் முக்கியத்துவம் வாய்ந்ததாக காணப்பட்டு ஒரு வித்தியாசத்தை ஏற்படுத்தியது. வழியில் விழுந்து போன சிலரை நினைத்துப் பாருங்கள். இதற்கு மிகச் சிறந்த உதாரணம் யூதாஸ் தான். அவனுடைய உண்மை யில்லாமை மற்ற அப்போஸ்தலர்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது பெரிய வித்தியாசத்தை ஏற்படுத்தியது. அதன்பின்பு, அனனியா, சப்பீராளுடைய சம்பவம் இருக்கிறது, அவர்கள் பொய்ச் சொன்னதனிமித்தம் பரிசுத்த ஆவியினால் அடிக்கப் பட்டுச் செத்தார்கள். பழைய ஏற்பாட்டில் நாதாபும், அபியூவும் எப்படி? மகா பார்வோனும் தேவனை எதிர்த்தபோது தோற்றுப் போனான். ஏரோது ராஜ வஸ்திரம் தரித்துக்கொண்டு, சிங்காசனத் தின் மேல்

உட்கார்ந்து ஜனங்களுக்கு பிரசங்கம் பண்ணினான், அப்பொழுது ஜனங்கள் இது மனுஷசத்தமல்ல, இது தேவசத்தம் என்று ஆர்ப் பரித்தார்கள். அவன் தேவனுக்கு மகிமையைச் செலுத்தாதபடியி னால் உடனே கர்த்தருடைய தூதன் அவனை அடித்தான்; அவன் புழுபுழுத்து இறந்தான்.

நாம் கர்த்தருடைய சித்தத்திற்கு பதிலளிக்காமல் இருந்தி ருந்தால், நாம் இழந்து போயிருப்பது மாத்திரமல்ல, ஏதாவது நடுத்தரமான வேலை கிடைத்து அதில் திருப்தியடைந்திருப் போம், குடிகாரர்களாக மாறியிருப்போம், போதைக்கு அடிமை களாயிருப்போம், சபிக்கும் பழக்கத்தில் வளர்ந்திருப்போம் இப்படியாகப் பல்வேறுப்பட்ட பிரச்சனைகளில் சிக்கியிருப் போம்.

நாம் மேற்கூறப்பட்ட பாதைகளில் சென்றிருக்காவிட்டா லும் நம் வாழ்க்கையை மதிப்பற்றதாக, முக்கியமற்றதாகத் தான் முடித்திருப்போம், நம்முடைய ஜீவியங்கள் இந்த உலகத்தில் குறிப்பிடத்தக்க வித்தியாசத்தை உண்டாக்கியிருக்காது. வேறு விதமாகச் சொன்னால், நாம் வாழ்ந்து மரித்திருக்கக்கூடும், நித்தி யத்தை இழந்து நம்முடைய வாழ்க்கையை முடித்திருப்போம். அது பயங்கரமாக, கோரமாக இருந்திருக்குமல்லவா?.

ஆனால், நாம் கிறிஸ்தவர்களானாலும் கூட, நாம் உண்மை யில்லாதவர்களாக இருந்தால், நம்முடைய ஆத்துமாவை இழந்து நம் வாழ்க்கையை முடித்திருப்போம், உலகத்திற்குள் மறுபடியும் போயிருப்போம், பாவம் மற்றும் வஞ்சனையான வாழ்க்கையை வாழ்ந்திருப்போம், ஏதாவது தவறு இழைக்கிற மதக் கூட்டத்தில் சேர்ந்திருப்போம், கர்த்தருடைய வழிக்கு விரோதமாக வாழ்ந் திருப்போம். இப்படிப்பட்ட காரியங்களை நினைப்பதற்கு கூட பயமாயிருக்கிறது.

நாம் தேவனுடைய பிள்ளைகளாகும் போது என்ன ஒரு வித்தியாசம்! இந்த உலகத்தில் அநேக கிறிஸ்தவர்கள் வெற்றி யுள்ளவர்களாக, முதன்மையானவர்களாக மாறுகிறார்கள். அவர் கள் வியாபாரத்தில் வெற்றி பெறுகிறார்கள், ஆனால் ஒரு கிறிஸ்த வர் கிறிஸ்தவத்தின் போதனைகளை தன்னுடைய வாழ்க்கையில் பயன்படுத்தும் போது வெற்றி பெறுவதற்கு அதிக வாய்ப்புள்ளது, ஆனால், அதே நேரத்தில் சத்தியத்திற்கும், நீதிக்கும் புறம்பான காரியங்களிலிருந்து ஒரு கிறிஸ்தவன் தன்னை விலக்கிக் காத்துக் கொள்ள வேண்டும்.

ஒருவர் கிறிஸ்தவராகும்போது, தன்னுடைய வாழ்க்கையை மாற்றுகிறார். அவர் இந்த உலகத்தை வித்தியாசமான விதத்தில்

பார்க்கிறார். அவர் தன்னுடைய இலக்கை அடைய, அவர் பின்பற்ற கிறிஸ்துவும், கிறிஸ்தவத்தின் போதனைகளும் உண்டு. அவர் கடின உழைப்பாளியாக இருக்கிறார், மற்றவர்களோடு இடைபடுவதில் நேர்மையுள்ளவராயிருக்கிறார், தன்னால் முடிந்த வரை வேலையை சிறப்பாக செய்கிறவராயிருக்கிறார். அவர் தான் வெற்றி பெற தனக்கு உதவிச் செய்கிற, உற்சாகப்படுத்துகிற கிறிஸ்தவர்களோடு சகவாசம் வைத்துக்கொள்கிறார். அவருடைய சரீரப்பிரகாரமான ஜீவியமும், அவருடைய குடும்ப அங்கத்தினருடைய சரீரப்பிரகாரமான ஜீவியமும், அவருடைய குடும்ப அங்கத்தினருடைய சரீரப்பிரகாரமான ஜீவியமும் மாறி விட்டது. அவர்கள் தங்கள் உணவுப் பழக்கவழக்கங்களினாலும், வாழ்க்கை விதத்தினாலும் சரீரங்களை தவறாகப் பயன்படுத்தமாட்டார்கள். ஆகையால், அவர்களுக்கு நல்ல ஆரோக்யம் இருக்கும். அவர்கள் தங்கள் பணத்தை மதுபானம், சூதாட்டம் மற்றும் தீயபழக்கங்களுக்கு செலவழிக்காமல் இருப்பதால் தங்கள் பணத்தை கல்வி, வியாபாரம் போன்ற மதிப்புள்ள காரியங்களுக்கு செலவிட முடிகிறது.

எனவே, கிறிஸ்தவம் நம்முடைய வாழ்க்கையையும், இந்த உலகத்தில் நம்முடைய எதிர்காலத்தையும் மாற்றியிராவிட்டால் நாம் எங்கே இருந்திருப்போம்? நம்முடைய நித்தியத்தை எங்கே கழிப்போம்?.

நீங்கள் இதற்காகத்தான் வாழவோ, மரிக்கவோ வேண்டும் என நினைத்தால், நீங்கள் கிறிஸ்தவராக இருக்க வேண்டும் என நான் உங்களை உற்சாகப்படுத்துகிறேன் கிறிஸ்தவம் உங்கள் வாழ்க்கையை நித்திய வெற்றியாக்கட்டும்.

**J.C. CHOATE**

## லேவியராகமத்தில் "ஏழு" கள்

1. ஒவ்வொரு ஏழாம் நாளும் ஓய்வு நாள்
2. ஒவ்வொரு ஏழாம் வருடமும் ஓய்வு வருடம்
3. ஏழு, ஏழு ஆண்டுகளைத் தொடர்ந்து யூபிலி ஆண்டு வரும்
4. பஸ்காவிலிருந்து ஏழு வாரங்கள் கழித்து பெந்தெகொஸ்தே பண்டிகை
5. ஏழாம் மாதத்தில் எக்காளம், கூடாரப் பண்டிகைகள் வரும்
6. பெந்தெகொஸ்தே பண்டிகை ஏழு நாட்களுக்கு நீடிக்கும்
7. பஸ்காவும் ஏழு நாட்களுக்கு நீடிக்கும்

பெண்கள் பகுதி

# ஒரு பெண் போதிக்க முடியுமா?

ஒரு கிறிஸ்தவப் பெண், இருபாலரும் கலந்திருக்கும் கூட்டத்தில் போதிக்க முடியுமா? என்பது கேள்வியாயிருந்தால், பதில் இல்லை என்பது தான். 1 கொரிந்தியர் 14:34,35 மற்றும் 1 தீமோத்தேயு 2:11-14ல் உள்ள வசனப் பகுதிகள், ஒரு பெண், சபையாகக் கூடிவந்திருக்கும் போது, ஆண்கள் மீது அதிகாரம் செலுத்துவதை தடை செய்கிறது. உபதேசம் பண்ணவும், புருஷன் மேல் அதிகாரஞ் செலுத்தவும், ஸ்திரீயானவளுக்கு நான் உத்தரவு கொடுக்கிறதில்லை; அவள் அமைதலாயிருக்க வேண்டும் என்று கூறுகிறது.

ஆனால், போதனை என்பது, பொதுவான ஓர் உரை என்பதிலும் அதிகமான பொருளைத் தனக்குள்ளே கொண்டிருக்கிறது. நாம் ஒவ்வொருவரும், நம்முடைய அன்றாட வாழ்க்கையை நடத்தும் போது ஒரு வகையில் போதிக்கவே செய்கிறோம்.

நம்முடைய நடத்தையினால் நாம் போதிக்கிறோம், நாம் மற்றவர்களோடு பழகும் விதத்தினால் போதிக்கிறோம். இளம் ஊழியனாகிய தீத்துவுக்குப் பவுல் எழுதும் போது, பெண்கள், தெளிந்த புத்தியுள்ளவர்களும், கற்புள்ளவர்களும் தேவ வசனம் தூஷிக்கப்படாதபடி நல் நடத்தையுடையவர்களுமாய் இருக்க வேண்டும் என்கிறார். தீமோத்தேயுவிற்கு, இளம் விதவைகளைக் குறித்து எழுதுகையில், அவர்களுடைய நடத்தை, நிந்திக்கிறதற்கு இடமுண்டாக்காமல் இருக்க வேண்டும் என்கிறார். இந்த புத்திமதியை அவர் எழுதியிருப்பதிலிருந்து, நாம் எல்லாருமே ஒருவகையில் போதிக்கிறோம் என்பது தெளிவாகிறது. நல்ல பாடங்களையோ அல்லது தேவ வசனத்தின் மேலும், அவருடைய ஜனங்கள் மேலும் அவமானத்தையும், நிந்தையையும் கொண்டு வருகிற மோசமான பாடங்களையோ மற்றவர்களுக்கு நாம் வாழ்கிற வாழ்க்கையின் மூலம் கற்றுத் தருகிறோம்.

தங்கள் இல்லத்தின் நான்கு சுவர்களுக்குள் பெண்கள் இடைவிடாது போதிக்கிறார்கள். சில கிறிஸ்தவப் பெண்கள் அவிசுவாசமுள்ள புருஷர்களைத் திருமணம் செய்ததை மனதில் வைத்து, பேதுரு புத்திமதிகளை எழுகிறார். அந்தப்படி மனைவிகளே, உங்கள் சொந்தப் புருஷர்களுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்; அப்பொழுது அவர்களில் யாராவது திருவசனத்திற்குக் கீழ்ப்படியாதவர்களாயிருந்தால், பயபக்தியோடு கூடிய உங்கள் கற்புள்ள

நடக்கையை அவர்கள் பார்த்து, போதனையின்றி, மனைவிகளின் நடக்கையினாலேயே ஆதாயப்படுத்திக்கொள்ளப்படுவார்கள். (1பேருது 3:1-2).

மனைவி கிறிஸ்தவளாகவும், கணவன் அப்படியில்லாத போதும், இரட்சிக்கப்படும்படி அவனுக்கு இருக்கிற ஒரே நம்பிக்கை அவனுடைய மனைவியின் உண்மையான நடத்தைதான். அவள் தன்னுடைய கிறிஸ்தவத்தைக் குறித்து அரைமனதாகவும், அவ்வப்பொழுது சபைக்கு போவதும், அநுதின ஆவிக்குரிய வளர்ச்சியைக் குறித்தோ அல்லது மற்றவர்களுக்குப் போதிப்பதைக் குறித்தோ கவலையற்றவளாயிருந்தால் அப்படிப்பட்டவள் தனது கணவனுக்கு இடறுதலுக்கான கல்லாக மாறும் வாய்ப்பு இல்லாமல் போகாது. அவளுடைய சொந்த நடத்தையே அவள் சுவிசேஷத்தின் உண்மையைக் காணாதபடி குருடாக்கிவிடுகிறது. ஆனால், அவள் அன்பாகவும், மரியாதையாகவும், நடந்து தன்னுடைய வாழ்க்கையில், தேவனுக்கே முதல் இடம் என்பதை வலியுறுத்தி வெளிப்படுத்தினால், கணவனும், குடும்பத்தினரும் அவளுடைய நன் நடத்தையிலிருந்து கற்றுக் கொள்வார்கள்.

பிள்ளைகள், வீட்டிலே கற்றுக் கொள்ளும் விசுவாசப் பாடங்கள் பெரும்பாலானவைகளுக்கு, பெண்களே போதகர்களாயிருப்பார்கள். இளம் பிரசங்கியாகிய தீமோத்தேயுவைக் குறித்து நாம் வாசிக்கிறோம். அந்த மாயமற்ற விசுவாசம் முந்தி உன் பாட்டியாகிய லோவிசாளுக்குள்ளும், உன் தாயாகிய ஐனிக்கேயாளுக்குள்ளும் நிலைத்திருந்தது, அது உனக்குள்ளும் நிலைத்திருக்கிறதென்று நிச்சயத்திருக்கிறேன் (2 தீமோத்தேயு 1:5) தீமோத்தேயுவின் தந்தை புறவினத்தாராக இருந்தார். கிறிஸ்துவின் மேல் விசுவாசத்தைக் கட்டுவதற்கு அடிப்படையான பழைய ஏற்பாட்டினால் உண்டாகிற விசுவாசம் அவனுக்குள் இல்லை. தீமோத்தேயு, இந்த சத்தியத்தை சிறுபிள்ளையாயிருக்கும் போதே, அவனுடைய பாட்டியும், தாயும் அவனை மடியிலே வைத்து கவனமாய் சொல்லிக் கொடுப்பதைக் கேட்டுத் தெரிந்து கொண்டான்.

பெண்கள் வேத வசனங்களைப் போதிக்கும் இந்த உதாரணங்கள், அவர்கள் தங்கள் நடத்தையின் மூலம், சந்தர்ப்பம் வாய்க்கும் பொழுதெல்லாம் போதிக்கும் சுதந்திரமுள்ளவர்களாகவே இருக்கிறார்கள் என்பதைக் காட்டுகிறது. ஆனால், ஒரு பெண் தன் குடும்பத்தினர் அல்லாதவர்களுக்கு போதிக்கலாமா?

ஆக்கில்லா என்கிற மனிதனைக் குறித்தும், அவனுடைய மனைவியாகிய பிரிஸ்கில்லாளைக் குறித்தும் அப்போஸ்தலர் 18:2,25,26ல் வாசிக்கிறோம். அவர்கள் கொரிந்து பட்டணத்தில் வாழ்ந்தார்கள். அவர்களின் தொழில் கூடாரம் பண்ணுதல். கொரிந்து பட்டணத்திலிருக்கையில் பவுல் இவர்களோடு தங்கினார். ஆக்கில்லாவும், பிரிஸ்கில்லாளும் ஏற்கனவே கிறிஸ்தவர்

ளாக இருந்தார்களா அல்லது பவுலால் மனமாற்றடைந் தார்களா என்பதைப் பற்றி வேதாகமம் நமக்கு ஒன்றும் திட்டமாகக் கூறவில்லை. ஆனால், பவுல் கொரிந்தை விட்டு புறப்பட்டுப் போகையில், இந்தத் தம்பதிகள், எபேசு மட்டும் அவனோடு சென்றார்கள். அங்கே, யூதனாயிருந்த அப்பொல்லோவைக் கண்டார்கள், அவன் சாதுரியவானும், வேதாகமங்களில் வல்ல வனுமாயிருந்தான் (வசனம் 24), அவன் பேசுகிறதைக் கேட்டு, அவனைச் சேர்த்துக் கொண்டு, தேவனுடைய மார்க்கத்தை அதிக திட்டமாய் அவனுக்கு விவரித்துக் காண்பித்தார்கள் (வச. 26).

இந்த வசனத்தின் மொழி நடையை நாம் கவனித்துப் பார்த்தால், ஆக்கில்லாவும், அவன் மனைவியும் சேர்ந்து, ஒரு கூட்டு முயற்சியாகத்தான் அப்பொல்லோவுக்கு போதித்தார்கள் என்பது தெளிவாகிறது. அந்த சம்பவம், ஒரு ஜெப ஆலயத்தில், எல்லோருக்கும் போதிக்கிறோமே அப்படியோ அல்லது சபை யாக கூடி வந்திருக்கும் போது, உபதேசிக்கிறோமே அப்படியோ அமைந்திருக்கவில்லை, மாறாக, அவனைத் தங்களோடு சேர்த் துக் கொண்டு அவர்கள் அவனுக்கு ஒரு வீட்டுச் சூழலிலே போதித் திருக்க அதிக வாய்ப்புண்டு. வீட்டிலே, வேதாகமத்தைப் பற்றி நாம் படிக்கும் அநேக, சமயங்களில், பெண்களும் பங்கெடுத்துக் கொள்வது நல்லதுதான். அச்சமயங்களில், அவளுடைய மனோ நிலையும், நடத்தையும், மற்ற கிறிஸ்தவர்களுக்கு என்ன சொல்லப் படுகிறதோ அதைப்போலவே; சாந்தமாகவும், அன்பாகவும் இருக்க வேண்டுமே தவிர, எனக்கெல்லாம் தெரியும் என்பதைப் போல அமைந்துவிடக் கூடாது.

அச்சுத் தொழில் வெகு முன்னேற்றம் கண்டிருக்கிற இக்காலத்தில், அநேக விதமான புத்தகங்கள் புழக்கத்திலிருப்ப தால், சில வேளைகளில், ஒரு கேள்வி கேட்கப்படுகிறது, அது என்னவென்றால், ஒரு பெண் எழுதிய ஒரு கட்டுரையையோ அல்லது புத்தகத்தையோ ஒரு ஆண் படித்தால் அது தவறா? என்பது தான் இக்கேள்வி. இதுவும், நாம் ஏற்கனவே படித்தது போல், குடும்பத்தில் வேதத்தைப் பற்றி படிக்கையில் பெண்கள் ஈடுபடுவதைப் போன்றே இருக்கிறது, எப்படியெனில், குடும்ப சூழலில், வார்த்தைகள் வாய் வழியாகப் பேசப்படுகிறது. இங்கு, அச்சிலிருக்கிறது அவ்வளவுதான். பொது இடத்தில் போதிப்ப தைப் போன்று, இந்த காரியத்தில் எதுவும் நடப்பதில்லை, புத்தகத்தைப் படிப்பவர் தான் விரும்பினால் அதைப் படிக்கலாம் அல்லது அதை மூடி கீழே வைத்துவிடலாம். அவர் எதைத் தெரிவு செய்யவும் அவருக்கு உரிமை உண்டு. அவர் படிக்கும் போது, அருகில் இல்லாத அந்த ஸ்திரீயானவள் தலைமைக்கான எந்த ஒரு அதிகாரத்தையும் (அந்த ஆண் மேல்) செலுத்துவதில்லை.

பெண்கள் பொதுவான இடங்களில் பிரசங்கிக்கக் கூடிய சந்தர்ப்பங்கள் ஏதாவது உண்டா? பவுல், தீத்துவுக்கு, முதிர் வயதுள்ள ஸ்திரீகள் பற்றி எழுதும் போது, பாலிய ஸ்திரீகள் தங்கள் புருஷரிடத்திலும், தங்கள் பிள்ளைகளிடத்திலும் அன்புள்ளவர்களும், தெளிந்த புத்தியுள்ளவர்களும், கற்புள்ளவர் களும், வீட்டில் தரித்திருக்கிறவர்களும், நல்லவர்களும், தங்கள் புருஷருக்குக் கீழ்ப்படிகிறவர்களுமாயிருக்கும்படி, அவர்களுக் குப் படிப்பிக்கத்தக்க நற்காரியங்களைப் போதிக்கிறவர்களு மாயிருக்கவும்.... (தீத்து 2:3-5) என்று எழுதுகிறார். ஆகவே, தேவன் பவுலைக் கொண்டு பெண்கள் மற்ற பெண்களுக்கும், சிறுவர்களுக்கும் போதிக்கலாம் என்று அனுமதி மாத்திரம் தராமல், கட்டளையும் கொடுத்திருக்கிறார். இது வீட்டிலோ, பொதுவான இடத்திலோ, சிறுவகுப்பிலோ, பெரிய வகுப்புகளி லோ, கருத்தரங்குகளிலோ, ஆண்கள் இல்லாத எந்த இடத்திலும் அப்படிச் செய்யலாம்.

சிறிய ஒரு கிராமத்திலோ அல்லது வேறு இடத்திலோ பெண்கள் மாத்திரம் இருக்கக் கூடிய சபைகள் இருக்க வாய்ப்பு கள் உண்டு. அப்படிப்பட்ட வேளையில் நாம் என்ன செய்ய வேண்டும்? தங்களை வழிநடத்துவதற்கு ஆண்கள் இல்லை என்ப தால், சபையாக கூடிவருவதையே விட்டுவிட வேண்டுமா? இல்லை; அந்த சபையின் அங்கத்தினர்கள் அனைவருமே பெண் களாக இருந்தால் அவர்களே ஆராதனையை நடத்தலாம், எந்த ஒரு ஆணும் அக்கூட்டத்தில் இல்லாத வரை.

ஆகவே, பெண்கள் போதிக்கலாமா என்பது கேள்வியல்ல? ஆனால், அவர்கள் வழிநடத்துகிறவர்களாக, தலைமைப் பொறுப்பை ஏற்கலாமா? என்பது தான் கேள்வி. ஆண்கள் இருக்கும் கூட்டத்தில் பெண்கள் பிரசங்கிக்கக்கூடாது. கிறிஸ்தவர் களாக கூடிவரும்போது, அதுவும் ஆணகளும் இருக்கும் போது, ஆராதனையின் பங்கை ஒரு ஆண் தான் நடத்த வேண்டும். இது ஆண்களுக்கென்று தேவன் தந்த கடமையாக இருக்கிறது, அதை அவர்கள் பெண்களிடம் கொடுக்கும்போது, அந்த பெண்கள் எவ்வளவு திறமையுள்ளவர்களாக இருந்தாலும் கூட இதுதான் நிலைமை. இப்படி பொறுப்புகளை பெண்களிடம் கொடுக்கும் ஆண்கள் தேவனுக்கு கீழ்ப்படியாமல் போகிறார்கள் என்பது தான் உண்மை.

சிறு பிள்ளைகளுக்கும், மற்ற பெண்களுக்கும், அவிசுவாசி களுக்கும் போதிப்பதே மகத்தானதொரு செயலாகும். அதற்கே அதிக நேரம் செலவாகும். அதைப் பெண்கள் அதிக கவனத்தோடு செய்தாலே, அநேகர் தங்கள் நித்தியத்தை, தேவனோடு கழிக்க முடியும். ஆகவே, பெண்களால் என்ன செய்யக் கூடாதோ அதைப் பற்றிய சர்ச்சையில் ஈடுபடுகிறதும், தர்க்கம் பண்ணுகிறதுமாயிராமல், அவர்களால் என்ன செய்ய முடியுமோ அதில் கவனம் செலுத்துவது மிகவும் நல்லது.

**B.B. CHOATE** **ரேச்சல் ராஜநாயகம்**

வாலிபர் பகுதி

# இயேசுவைப் பின்பற்றுவதால் கிடைக்கும் பலன்கள்

**பி**ரியமான வாலிப நெஞ்சங்களே! கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன். மறுபடியும் உங்களை இந்தக் கட்டுரையின் வாயிலாக சந்திப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். இன்றைய நாட்களில் வாலிபர்களில் பெரும்பாலானோர் எந்த ஒரு காரியத்தையும் ஆதாயத்திற்காக செய்கிறவர்களாக இருக்கின்றனர். மற்றவர்களுக்கு சேவை செய்யும் மனப்பான்மை வாலிபர்கள் மத்தியில் குறைந்து விட்டது, சுயநலம் பெருகிவிட்டது. கர்த்தருக்கு ஊழியம் செய்ய வாருங்கள் என்று அழைப்பு விடுக்கும் போது அநேக வாலிபர்கள் கேட்கும் கேள்வி எங்களுக்கு என்ன கிடைக்கும்? என்பது தான். இந்தியாவில் கிறிஸ்தவ மார்க்கத்தைப் பற்றி ஒரு கருத்து நிலவு கிறது. அதென்னவென்றால், கிறிஸ்தவ மார்க்கம் வெள்ளைக்காரர் களின் மார்க்கம், இந்தியாவில் உள்ளவர்கள் வெளிநாட்டிலிருந்து பணத்தை பெற்றுக்கொண்டு இந்த மார்க்கத்தைப் பரப்பி வருகின் றனர் என்பது. இது தவறான கருத்தாகும்.

உண்மையைச் சொல்லப்போனால் இயேசு கிறிஸ்து பிறந்த இடமும், அவர் ஊழியம் செய்த இடங்களும் நமது ஆசிய கண்டத் தைச் சேர்ந்தவைகளாகும். வெள்ளைக்காரர்கள் தேவனுடைய வார்த்தைகள் அடங்கிய வேதாகமத்தை விசுவாசிக்கிறார்கள், அதில் தேவன் என்ன சொல்லியிருக்கிறாரோ அதன்படி பெரும் பாலானோர் செய்கிறார்கள். ஊழியம் செய்கிறவர்களை பொருளா தார உதவியால் தாங்க வேண்டும் என வேதாகமம் கூறுகிறது. அதற்குக் கீழ்ப்படிந்து இந்தியாவில் ஊழியங்கள் நடைபெறுவ தற்கு அவர்கள் வேதவசனங்களினால் ஏவப்பட்டு உதவி செய்து வருகிறார்கள். ஆனால், இங்கு அநேகர் நாங்கள் கிறிஸ்தவர்க ளானால் எங்களுக்கு என்ன ஆதாயம் கிடைக்கும்? எங்கள் பிள்ளைகளுக்கு வேலை வாய்ப்புகள் கிடைக்குமா? அல்லது ஏதேனும் சலுகைகள் கிடைக்குமா? என்று கேட்கிறார்கள். இயேசு கிறிஸ்துவோடு மூன்று வருடங்கள் இருந்து அவர் செய்த அற்புத அடையாளங்களை நேரில் கண்ட அப்போஸ்தலனாகிய பேதுரு வே ஒரு கட்டத்தில் இதோ நாங்கள் எல்லாவற்றையும் விட்டு உம்மைப் பின்பற்றினோமே, எங்களுக்கு என்ன கிடைக்கும் என்று கேட்டார். இன்றும் இயேசுவைப் பின்பற்ற விரும்பும் அநேகர் கேட்கும் கேள்வி இதுவாகத்தான் இருக்கிறது. பேதுரு வைப் பொறுத்தவரை அவரும், அவருடைய சகோதரனாகிய அந்திரேயாவும் முதலில் யோவான் ஸ்நானகனுடைய சீஷர்களா யிருந்தார்கள். பின்பு அந்திரேயாவின் செல்வாக்கினால் பேதுரு கிறிஸ்துவினிடத்தில் கொண்டு செல்லப்பட்டார். அப்பொழுதிருந்

தே இயேசுவின் பிரியமான சீஷனாகவும், ஊழியக்காரனாகவும் மாறி விட்டார் (யோவான் 1:40-42).

சரி, நாம் இப்போது மத்தேயு 19:27 ஆம் வசனத்தில் பேதுரு இயேசுவை நோக்கி, இதோ நாங்கள் எல்லாவற்றையும் விட்டு உம்மைப் பின்பற்றினோமே எங்களுக்கு என்ன கிடைக்கும்? என்ற கேள்விக்கு கடந்து செல்வோம். நான் ஏற்கனவே குறிப் பிட்டது போல இன்றும் இயேசுவைப் பின்பற்ற விரும்பும் அநேகர் கேட்கும் கேள்வி இதுவாகத்தான் இருக்கிறது. வாலிப நெஞ்சங்களே! நாம் கிறிஸ்துவைப் பின்பற்றுவதால் நமக்குக் கிடைக்கும் நன்மைகள் விலையேறப் பெற்றவை.

## I கிறிஸ்துவைப் பின்பற்றுவதால் சாமதானம் கிடைக்கும்

இன்று உலகெங்கும் சமாதானக் குறைச்சல் நிலவுகிறது. எங்கு பார்த்தாலும் சண்டைகள், யுத்தங்கள், குண்டு வெடிப்புகள் என்று தான் நாம் கேள்விப்படுகிறோம். சில சமயங்களில் அவைகளை நாம் பார்க்கவும் நேரிடுகிறது. இதற்கெல்லாம் காரணம் மக்கள் கிறிஸ்துவின் சிந்தையை உடையவர்களாய் இல்லாதது தான். இயேசு சமாதானப் பிரபுவாயிருக்கிறார் (ஏசாயா 9:6). சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள், அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள் என்று நம்முடைய அருமை இரட்சகர் மலைப்பிரசங்கத்திலே சொல்லியிருக்கிறார் (மத்தேயு 5:9). நம்முடைய அருமை இரட்சகர் எதைச் செய்தாரோ அதையே உபதேசித்திருக்கிறார். எனவே, நாம் சமாதானம் பண்ணுகிறவர்களாயிருந்தால் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற வாக்குத்தத்தம், நாம் தேவனுடைய புத்திரர் என்னப்படுவோம் என்பதுதான். வாலிப நெஞ்சங்களே! இந்த பூமியில் நாம் தேவனுடைய பிள்ளைகள் என்று அழைக்கப்படுவதைக்காட்டிலும் பெருமையானது அல்லது மேலானது ஒன்றுமில்லை. கூடுமானால், உங்களாலானமட்டும் எல்லா மனுஷரோடும் சமாதானமாயிருங்கள் என்று பவுல் நமக்கு அறிவுறுத்துகிறார் (ரோமர் 12:18).

மேலும் ஏசாயா 26:3ன் படி நாம் தேவனை உறுதியாய்ப் பற்றிக்கொண்ட மனதை உடையவர்களாய் இருந்தால் நமக்கு பூரண சமாதானம் கிடைக்கும். எனவே, நாம் கிறிஸ்துவைப் பின் பற்றுவதால் இந்த உலகத்தின் துன்பங்கள் நம்மை நெருக்கினாலும் நாம் சமாதானமான வாழ்க்கையை வாழலாம். ஏனென்றால், இயேசு கிறிஸ்துவே நம்முடைய சமாதான காரணராயிருக்கிறார் (எபேசியர் 2:14).

## II கிறிஸ்துவைப் பின்பற்றுவதால் பரலோக பலன் கிடைக்கும்

இந்த உலகத்தில் நாம் செய்யும் எந்த கிரியைக்கும் பிரதி பலன் உண்டு. நாம் கிறிஸ்துவினிமித்தம் நிந்திக்கப்பட்டு, துன்பப் படுத்தப்பட்டு, பலவித தீமையான மொழிகளையும் நம் பேரில்

பொய்யாய்ச் சொல்வார்களானால் நாம் பாக்கியவான்களாயிருப் போம், பரலோகத்தில் நம் பலன் மிகுதியாயிருக்கும் (மத்தேயு 5:11,12). ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்கிறவனானால் என்னைப் பின்பற்றக்கடவன், ஒருவன் எனக்கு ஊழியஞ் செய் தால் அவனைப் பிதாவானவர் கனம் பண்ணுவார் (யோவான் 12:26), என்று இயேசு கூறுகிறார். எனவே, நாம் கிறிஸ்துவுக்காக சில மனிதர்களுடைய இகழ்ச்சிக்கும் ஆளாகலாம், ஆனால், பிதா வானவர் நம்மை கனம் பண்ணுவார். இயேசுவைப் பின்பற்றுவ தென்பது கடினமானதுதான். ஆகையால் தான், “இயேசு ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால் அவன் தன்னைத் தான் வெறுத்து தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னை பின்பற்றக் கடவன் ” என்று சொன்னார். இங்கே சிலுவை என்பது பாடுக ளைக் குறிக்கிறது. மேலும் இயேசு தன்னைப் பின்பற்றும்படி யாரையும் வலியுறுத்தவில்லை, வற்புறுத்தவில்லை. நம்முடைய முழு விருப்பத்தோடும், முயற்சியோடும் அவரைப் பின்பற்றி னால் அவருக்காக நாம் எதையாவது இழந்து போனால் இப்பொழுது இம்மையிலே துன்பங்களோடே கூட நூறத்தனை யாகவும், மறுமையிலே நித்திய ஜீவனையும் அடைவோம் (மாற்கு 10:29,30). எனவே, பிரியமான வாலிபர்களே, நாம் இயேசுவைப் பின்பற்றுவதனால் இம்மைக்கான ஆசீர்வாதங் களையும், மறுமைக்கான ஆசீர்வாதங்களையும் பெற்றுக் கொள் வோம். கர்த்தர் தாமே அதற்கு உதவிச் செய்வாராக ஆமென்!.

**பென்னி மார்ட்டின்**

## நாளும், நடப்பும்

*1. அணுகுண்டுகளை ஏற்றிச் செல்லும் திறன்படைத்த அக்னி-3 ஏவுகணை வெற்றிகரமாக விண்ணில் ஏவி சோதனை செய்யப்பட்டது.*

*2. மரபணு மாற்றம் செய்யப்பட்ட கத்தரிக்காய் சாகுபடிக்கு இந்தியாவில் அனுமதி இல்லை, மத்திய அமைச்சர் ஜெய்ராம் ரமேஷ் தகவல்.*

*3. கிராம மருத்துவப்படிப்பு தமிழகத்தில் கிடையாது என அரசு அறிவிப்பு.*

*4. அண்டை நாடான இலங்கையில் தன்னை எதிர்த்து போட்டியிட்டு தோற்ற சரத்பொன்சேகாவை சிறையில் அடைக்க ராஜபக்சே உத்தரவு.*


*5. விலைவாசி விரைவில் கட்டுக்குள் கொண்டு வரப்படும் என பிரதமர் அறிவிப்பு.*

*6. தென் ஆப்பிரிக்காவுடனான முதல் டெஸ்டில் இந்தியா இன்னிங்ஸ் தோல்வி.*



# விதைக்கிறவன் உவமை

**கி**றிஸ்துவுக்குள் பிரியமான தம்பி தங்கைகளே! கர்த்தருடைய ஈவாகிய உங்களுடன் நான்கு வகையான நிலம், இருதயம் பற்றி படிப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். சென்ற மாதம் வழியருகே விதைக்கப்பட்ட நிலம் பற்றி பார்த்தோம். இம்மாதம் இரண்டாவது நிலமான "**கற்பாறையின் மேல் விதைக்கப்பட்ட விதை**" பற்றி பார்ப்போம்.



1. இயேசு கிறிஸ்து இவ்வகையான மனிதர்களை எவ்வாறு விவரிக்கிறார் என்று ஜாக்கிரதையாய் கவனியுங்கள்.
2. முதலாவது, இவர்கள் வசனத்தை சந்தோஷத்துடனே ஏற்றுக் கொள்கிறார்கள்.
3. இவர்கள் கொஞ்ச காலம் விசுவாசிக்கக்கூட செய்கிறார்கள்.
4. ஆனால், இந்த வகை இருதயத்திற்கு என்ன பிரச்சனை?
5. இந்த மனிதனுக்கு "ஆவிக்குரிய வேர் இல்லை".
6. வசனத்தை தன் இருதயத்தின் ஆழத்திலே பதிய வைப்பதில்லை.
7. இவ்வகை மக்கள் ஆவிக்குரிய ஆழம் அற்றவர்கள்.
8. இந்த மக்களுக்கு என்ன நடக்கும் என்று இயேசு கூறுகிறார்? சோதனை காலத்தில் "பின் வாங்கிப் போகிறார்கள்".

9. **வேர் இல்லாதபடியால்** தவறுகளுடன் தடுமாறிப் போகிறார்கள்.

10. **விளைவு :** வசனத்தினிமித்தம் உபத்திரவமும், துன்பமும் உண்டானவுடனே இடறலடைகிறார்கள். (மத்தேயு: 13:21)

**நீங்களும் நானும் தேவனுடைய வார்த்தையை இருதயத்தில் எப்படி ஆழமாக பதிய வைக்க முடியும்?**

a. அன்றாட முயற்சி தேவை.

b. தினமும் வேதம் வாசிக்க வேண்டும்.

c. ஆழமாகவும், கருத்தாகவும் சிந்திக்க வேண்டும்

d. சிந்தித்து, தியானித்து, வாழ்க்கையை மாற்ற எப்படி பயன்படுத்த வேண்டும் என்று இருதயத்தில் **பதிய வைத்துக்** கொள்ள வேண்டும்.

**முடிவு :** இவ்வாறு செய்யும் போது மட்டும் தான் ஆவிக்குரிய ஆழமான வேர்கொள்ள இயலும். நீங்களும், நானும் இடறல் அடைந்து பின்வாங்கிப் போகாமல் இருக்க வேண்டுமானால் வசனத்தை சிறு பிராயத்திலிருந்தே இருதயத்தின் ஆழத்திற்கு கொண்டு சென்று பதிய வைத்துக் கொள்ள வேண்டும். அப்படிச் செய்ய தேவன் நமக்கு உதவி செய்வாராக ! ஆமென் !!

R. ஏபில் ரோஜர் நாயகம்

**மனப்பாட வசனம்**
லூக்கா 8:15

## சத்தியம்

1. தேவனுடைய வசனமே சத்தியம் [யோவான் 17:17]
2. சத்தியம் நம்மை விடுதலையாக்கும் [யோவான் 8:38]
3. சத்தியத்தை நம்மால் புரிந்து கொள்ள முடியும் [எபேசியர் 3:34]
4. தேவனுடைய சத்தியம் குறைவற்றது [சங்கீதம் 19:7]
5. சத்தியம் வல்லமையுள்ளது [எபிரெயர் 4:12,13]
6. சத்தியத்தால் நம்மை சுத்தப்படுத்த முடியும் [சங்கீதம் 119:9]
7. சத்தியத்தால் ஒருவரை பக்திவிருத்தியடையச் செய்ய முடியும் [அப் 20:32]

# ஒருவர் எப்படி பரிசுத்தவானாகிறார்?

புதிய ஏற்பாட்டில் நாம் "பரிசுத்தவான்"களைப் பற்றி வாசிக்கிறோம்; கொலோசெ பட்டணத்தில் கிறிஸ்துவுக்குள் பரிசுத்தவான்களும், விசுவாசிகளுமாயிருக்கிற சகோதரர் களுக்கு எழுதுகிறதாவது (கொலோசெயர் 1:2) என்றுள்ளது.

புதிய ஏற்பாட்டில் வெற்றிகரமான எழுத்தாளரான பவுலுக்கு "பரிசுத்தவான்" என்கின்ற பதத்தை கிறிஸ்தவர்களோடு சம்மந்தப் படுத்திப் பேசுவது வழக்கமான ஒன்றாகத்தான் இருந்தது. அவர் பரிசுத்தவான் என்கின்ற பதத்தை கொலோசெ பட்டணத்தில் இருந்த சபைக்கு எழுதும்போது மாத்திரம் பயன் படுத்தவில்லை, கிறிஸ்து இயேசுவுக்குள் விசுவாசம் வைத்திருந்த விசுவாசி களுக்கும் பிலிப்பியர், தெசலோனிக்கேயர், பிலேமோன் போன்ற புத்தகங்களிலும் பயன்படுத்துகிறார்.

வெளிப்படுத்தின விசேஷத்தில் "பரிசுத்தவான்" என்கிற வார்த்தை வேதாகமத்தின் மற்றெந்த புத்தகங்களை விட அதிக மாக பதிமூன்று முறை பயன்படுத்தப்பட்டுள்ளது, அது மாத்திர மல்ல இந்த புத்தகத்தில், அதாவது வெளிப்படுத்தின விசேஷத்தில் "பரிசுத்தவான்" என்கிற பதம் மிக ஆழமானப் பொருளைக் கொடுக்கும் விதத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. மேலும், இந்தப் புத்தகத்தில் "பரிசுத்தவான்" என்கின்ற பதம் கிறிஸ்துவை ஆண்டவரென்று தங்கள் ஜீவியங்களில் ஏற்றுக் கொண்டவர்களை குறிக்கும் விதத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது, அதுமாத்திரமல்ல "பரிசுத்தவான்கள்" உண்மையுள்ளவர்களாகவும், இயேசுவின் உண்மையான சாட்சியாகவும் விவரிக்கப்பட்டுள்ளார்கள்.

எனவே, "பரிசுத்தவான்" என்பவன் ஒரு கிறிஸ்தவனாக, கிறிஸ்து இயேசுவுக்குள் ஆழமான நம்பிக்கை உடையவனாக, ஞானஸ்நானத்தின் மூலம் தேவனுடைய குடும்பத்தில் பிறந்தவ னாக, தேவனுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து அவருடைய சித்தத்தின்படி செய்கிறவனாக இருக்கிறான். ஓர் உண்மையான "பரிசுத்தவான்" தன்னுடைய வாழ்க்கையிலே, பேச்சிலே தான் இயேசு கிறிஸ்துவின் உண்மையுள்ள, அர்ப்பணிக்கப்பட்ட சீஷன் என்பதை வெளிப்படுத்துகிறான். ஒருவர் பரிசுத்தவானாயிருப்ப தற்கு அவர் தீமையினின்று விலகி தன்னை முழுமையாக தேவனி டத்தில் அர்ப்பணித்துக்கொள்வது அவசியமாயிருக்கிறது.

தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களாயிருப்பதற்கு நம் நடக்கைகளெல்லாவற்றிலும் பரிசுத்தமாயிருப்பது அவசிய மாயிருக்கிறது. ஏனென்றால், " நான் பரிசுத்தர் ஆகையால், நீங்களும் பரிசுத்தராயிருங்கள்" என்று எழுதியிருக்கிறதே

(1பேதுரு 1:16) இங்கே உட்பொருளாக சொல்லப்பட்டிருக்கிறது என்னவென்றால் ஒரு கிறிஸ்தவன் தன்னை இந்த உலகத்தி லிருந்து பிரித்தெடுத்துக்கொள்ள வேண்டும் என்பது தான்.

பவுல் மறுபடியும் இப்படியாக எழுதுகிறார், "அப்படி யிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்க ளை வேண்டிக் கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை, நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும், பிரியமும் பரி பூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்" (ரோமர் 12:1,2).

கேட்டுகேட்டு அலுத்துப்போன வாக்கியமாகிய "நான் பரிசுத்தவானல்ல" என்பதை ஒரு கிறிஸ்தவன் உபயோகிப்பது "பரிசுத்தவான்" என்கின்ற பதத்தை தவறாக பயன்படுத்து வதாகும்.

**HOYT HATTCOCK** **BENNY MARTIN**

## அப்போஸ்தலர்கள் நடபடிகளில் முதல் முதல் சம்பவங்கள்

| | | |
|---|---|---|
| 1. | பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம் | (அப். 2ம் அதி.) |
| 2. | சபை ஸ்தாபிக்கப்படுதல் | (அப். 2ம் அதி.) |
| 3. | முதல் சுவிசேஷப் பிரசங்கம் | (அப். 2ம் அதி.) |
| 4. | இயேசுவின் நாமத்தில் முதல் ஞானஸ்நானம் | (அப். 2:38 அதி.) |
| 5. | புதிய ஏற்பாட்டு சபையில் முதல் ஆராதனை | (அப். 2:42 அதி.) |
| 6. | சபையில் முதல் பிரச்சினை | (அப். 5ம் அதி.) |
| 7. | உதவிக்காரர்கள் தேர்ந்தெடுக்கப்படுதல் | (அப். 6ம் அதி.) |
| 8. | முதல் கிறிஸ்தவ இரத்தசாட்சி | (அப். 7ம் அதி.) |
| 9. | புறவினத்திலிருந்து முதல் மனமாற்றம் | (அப். 10ம் அதி.) |
| 10. | முதல் புறவின சபை | (அப். 11ம் அதி.) |
| 11. | முதல் நற்செய்திப் பயணம் | (அப். 13ம் அதி.) |
| 12. | ஐரோப்பாவில் முதல் சபை | (அப். 16ம் அதி.) |

## “ துருவின் சாட்சி ” நூலில் இருந்து

### பாடம் - 1 (சென்ற மாதத் தொடர்ச்சி)

## கொடுப்பது சம்பந்தமான மனப்பான்மைகள்

### III சிலர் அனனியா, சப்பீராளுடைய மனப்பான்மை கொண்டிருக்கிறார்கள்

“ அனனியா என்னும் பேருள்ள ஒருவனும், அவனுடைய மனைவியாகிய சப்பீராளும் தங்கள் காணியாட்சியை விற்றார்கள். தன் மனைவி அறிய அவன் கிரயத்திலே ஒரு பங்கை வஞ்சித்து வைத்து ஒரு பங்கைக் கொண்டு வந்து, அப்போஸ்தலருடைய பாதத்திலே வைத்தான்” (அப். 5:1-2).

இந்த இருவரும் கர்த்தருக்கு கொடுப்பதில் சொன்ன பொய் எவ்வித சந்தேகமுமின்றி பணத்தைப் பற்றி இவர்களுக்கு தவறான மனப்பான்மை இருந்ததையே நமக்கு தெளிவுபடுத்துகிறது. ஒவ்வொரு முறையும் ஒருவர் தன்னுடைய வரவுக்குத் தக்கதாக கொடுப்பது போல் ஒரு எண்ணத்தை ஏற்படுத்தி விட்டு, அதன் பின்பு உதாரத்துவமாய்க் கொடுக்க மறுத்தால், இந்த அனனியா, சப்பீராளைப் போன்று குற்றமுள்ளவர்களாகவே காணப்படுவர். கர்த்தருக்குக் கொடுக்கிற காரியத்தில் நாம் பொய் சொல்லுகிறவர்களாய் இருந்து கொண்டு அனனியா, சப்பீராள் சொன்ன பொய் மிக மோசமானது என்று ஏன் நாம் நினைக்க வேண்டும்?. ஒருவர் இப்படியாகச் சொல்கிறார், கர்த்தருக்கு கொடுப்பதில் நான் பொய் சொல்வதில்லை, ஆனால், நான் உதாரத்துவமாய்க் கொடுப்பதில்லை அவ்வளவு தான் என்று. இப்படிச் சொல்லுவது, தேவனிடத்தில் பொய் சொல்வது மோசமானதா அல்லது தேவனை வஞ்சிப்பது மோசமானதா? என்று கேட்பது போலல்லவா உள்ளது (மல்கியா 3:8).

### IV சிலருக்கு பர்னபாவின் மனப்பான்மை இருக்கிறது

“ சீப்புருதீவானும் லேவியனும் அப்போஸ்தலராலே ஆறுதலில் மகன் என்று அர்த்தங்கொள்ளும் பர்னபா என்னும் மறுபேர் பெற்றவனுமாகிய யோசே என்பவன், தனக்கு உண்டாயிருந்த நிலத்தை விற்று, அதின் கிரயத்தைக் கொண்டு வந்து, அப்போஸ்தலருடைய பாதத்திலே வைத்தான்” (அப். 4:36-37).

பர்னபா நல்லவன் என்று ஏன் அழைக்கப்பட்டான் என்பதைப் புரிந்து கொள்வது கடினமானதல்ல (அப். 11:24) இவ்வகையான அல்லது இதுபோன்ற மனிதனை நாம் பின்பற்ற முயற்சிக்க வேண்டும். பர்னபாவைப் போன்று சபையில் உள்ள

வர்கள் திறந்த மனதுடன் காணப்பட்டு, உதாரத்துவமாய்க் கொடுத்தால் எத்தனை நன்மையான காரியங்கள் நடந்திருக்கும் என்பதை நினைத்துப்பாருங்கள். யூதாஸ், பணக்கார வாலிபன் மற்றும் அனனியா, சப்பீராள் போன்றவர்களிடமிருந்து பர்னபா எப்படியாக வித்தியாசப்படுகிறார் என்பதை கவனியுங்கள்.

பர்னபா ஏன் இப்படிப்பட்ட நற்கிரியையை செய்தார்? ஏனெனில், அவருக்கு கொடுத்தல் பற்றி அருமையான மனப்பான்மை இருந்தது. இந்த நல்ல மனிதன், கொடுப்பது பற்றிய பிரசங்கங்களைக் கேட்டு, கேட்டு நான் அலுத்துப் போய் விட்டேன் என்று சொல்லுவார் என்பதை நீங்கள் கற்பனை செய்து பார்க்க முடியுமா?.

இந்த நல்ல மனிதனிடம், ஒரு சுவிசேஷப் பிரசங்கியார், சுவிசேஷம் கேள்விப்படாதவர்களுக்கு சுவிசேஷத்தை அறிவிக்க காணிக்கை கேட்டிருந்தால், இவர் கோபப்பட்டிருப்பார் என்று நினைக்கிறீர்களா? பர்னபா போன்ற நல்ல மனிதர்கள் குறித்து வாசிக்கும் போதெல்லாம் அதிகமாக கொடுக்க வேண்டும் என்கிற உறுதியான ஆசை தானாக வருகிறது.ஒவ்வொரு நேரமும் பர்னபா, கர்த்தருக்குக் கொடுத்தல் பற்றி ஒரு பிரசங்கியார் பிரசங்கிக்க கேட்டிருப்பார். அவருக்கு சரியான மனப்பான்மை இருந்தபடியால் அந்தப்பிரசங்கத்தை கேட்கும் போது பர்னபா புன்னகையுடன் அங்கே அமர்ந்திருப்பார். கர்த்தருக்குக் காணிக்கை கொடுப்பது பற்றிப் பேசும்போது, அதைக் கேட்டு உங்களுக்கு மகிழ்ச்சி வரவில்லையென்றால், உங்கள் இருதயம் இயேசுவோடு இசைவாக இல்லை என்பது திட்டமானது.

**V சிலருக்கு ஏழை விதவையின் மனப்பான்மை இருக்கிறது**

இயேசு போதித்த மாபெரும் பாடங்களுள் ஒன்று மாற்கு பன்னிரெண்டாம் அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இச்சந்தர்ப்பத்தில், நாம் ஏராளமானோர் காணிக்கை போடுகிறதைக் காண்கிறோம். தங்களைப் பற்றி எப்படி ஒரு எண்ணத்தை சிலர் முயற்சி செய்திருப்பார்களோ தெரியவில்லை. ஏனெனில், இயேசு காணிக்கைப் பெட்டிக்கு எதிராக உட்கார்ந்து, ஜனங்கள் காணிக்கைப் பெட்டியில் பணம் போடுகிறதைப் பார்த்துக் கொண்டிருந்தார். இன்று இயேசு உங்கள் அருகில் நின்று நீங்கள் காணிக்கை போடுகிறதைப் பார்த்தால், உங்கள் காணிக்கை எப்படிப்பட்டதாயிருக்கும்? இயேசு நாம் காணிக்கைப் போடுகிற ஒவ்வொரு முறையும் நம்மை பார்த்துக் கொண்டிருக்கிறார் என்பதை நாம் மனதில் கொள்ள வேண்டும். கர்த்தருடைய நாளன்று சபைக்கு முன்பாக நீங்கள் நடந்து சென்று எல்லோரும் பார்க்க நீங்கள் காணிக்கைப் பெட்டியில் காணிக்கை போடும்

போது, நீங்கள் வெட்கப்படுவீர்களா? ஒருவரோ நான் வெட்கப் பட்டுப்போவேன் என்று சொல்கிறார். ஆனால், நீங்கள் உதாரத் துவமாய்க் கொடுத்தால் வெட்கப்பட்டுப் போவதில்லை. அந்த ஏழை விதவை தான் தியாகமாய்க் கொடுத்ததை தன்னுடைய மனதிலே அறிந்திருந்தபடியால் அவள் வெட்கப்படவில்லை. மாறாக, அவள் இன்றளவும் போற்றப்படுகிறாள்.

நாம் எல்லோரும் நம்முடைய வரவுக்குத்தக்கதாக காணிக்கை கொடுத்தால் கர்த்தருடைய சபைகளில் காணிக்கை ஒரு வருடத்திற்கு பல கோடி ரூபாய் சேரும். கடந்த வருடக் காணிக்கையை விட இந்த வருடம் காணிக்கை சில கோடி ரூபாய்க்கு மேல் இருந்தால், இந்தியாவில் உள்ள கிறிஸ்துவின் சபைகள் என்னவெல்லாம் செய்ய முடியும் என்று நினைத்துப் பாருங்கள். இந்த பணத்தைக் கொண்டு ஊழியர்களுக்கு மாதாந்திர உதவித்தொகை கொடுத்தது போக மீதமிருக்கும் லட்சக்கணக்கான ரூபாய்களை கொண்டு எல்லா முக்கியமான வானொலிகளிலும், தொலைக்காட்சிகளிலும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க முடியும். அநாதைப் பிள்ளைகள் மற்றும் விதவை களைப் போஷிக்க முடியும், இந்தியக் கிறிஸ்துவின் சபைகளின் உதவிகளைக் கொண்டே வேதாகமக் கல்லூரிகளை நாம் நடத்த முடியும்.

சகோதரரே, இந்தக் காரியங்களை நம்மால் செய்ய முடி யும், இவைகள் செய்யப்பட வேண்டும். சபை அங்கத்தினர்கள் ஒவ்வொருவரும் உதாரத்துவமாய்க் கொடுக்கும் போது இதை சாதிக்க முடியும். சபை அங்கத்தினரின் காணிக்கை சராசரியாக அவர்கள் எவ்வளவு கொடுக்க வேண்டுமோ அந்த தொகைக்கு சரிபாதி கூட இன்னும் தேறவில்லை. பல்லாயிரம் கிறிஸ்துவின் சபை அங்கத்தினர்கள், இப்போது அவர்கள் கொடுக்கிற காணிக்கையை விட குறைந்தது வாரத்திற்கு இருபது ரூபாய் அதிகரித்து விட்டார்கள் என்று வைத்துக்கொள்வோம், இது ஒரு வருடத்திற்கான 52 வாரங்களில் பல கோடிகளாகப் பெருகி விடும். ஆகையால், ஒவ்வொருவரையும் வாரத்திற்கு தங்கள் காணிக்கையில் இருபது ரூபாயாகிலும் அதிகரிக்க உற்சாகப் படுத்துவோம். நாம் நம்முடைய பணத்தைக் குறித்தும், நாம் காணிக்கை கொடுக்கும் விதத்தைக் குறித்தும் உணர்வடைந்தால் அது ஊழிய காரியங்களுக்குப் பேருதவியாக இருக்கும். ஒரு பிரசங்கியர் இப்படியாகச் சொன்னார். “ நன்றாக ஆடைகள் அணிந்திருக்கிற சபை அங்கத்தினர்களைப் பார்க்கும் போது ஏழைகள் எங்கே? என்று கேட்கிறேன். ஆனால் காணிக்கைப் பெட்டியை பார்க்கும்போது பணக்காரர்கள் எங்கே? என்று கேட்கிறேன் ”.

ஒரு தோற்றுப்போன பிரசங்கியார் காவல்துறை வேலையில் சேர முயற்சி செய்து கொண்டிருந்தார். காவல் துறை அதிகாரி அந்த பிரசங்கியாரிடம், நேர்காணல் தேர்வு நடத்தினார், மேலும், வழக்கமான சில கேள்விகள் கேட்டு விட்டு, ஒரு கேள்வி இப்படியாகக் கேட்டார். “கலகக் கூட்டத்தை கலைக்க நீங்கள் என்ன செய்வீர்கள்?” என்று. பிரசங்கியார் ஒரு நிமிடம் யோசித்து, “எல்லோரும் பணம் கொடுங்கள் என்று வசூலில் இறங்குவேன்” என்று பதில் சொன்னார். இது எப்படியிருக்கிறது? பணம் கை விட்டுப் போவதில் மனிதர்களுக்கிருக்கும் மனநிலைக்கு இது ஓர் உதாரணம்.

## VI தாவீதின் மனப்பான்மை

“நான் இலவசமாய் வாங்கி என் தேவனாகிய கர்த்தருக்கு சர்வாங்க தகன பலிகளைச் செலுத்தாமல், அதை உன் கையிலே விலைக் கிரயமாய் வாங்குவேன்” (2சாமுவேல் 23:24).

நாம் எத்தனை முறை இலவசமாய் பெற்றுக் கொண்டவை களை கர்த்தருக்கென்று காணிக்கையாகக் கொடுக்கிறோம்? மல்கியா தீர்க்கன் ஜனங்கள் கர்த்தருக்கு குருடான, ஊனமான, நோய்வாய்ப்பட்ட மிருகங்களை பலியாகக் கொடுத்ததை கடுமையாக கண்டிக்கிறார். அவைகளின் மேல் அதிபதி கூட பிரியமாயிருக்கமாட்டானே என்று சாடுகிறார். அப்படிப்பட்ட குருடான, ஊனமான பலிகள் அன்றும் தேவனால் ஏற்றுக் கொள் ளப்படவில்லை இன்றும், என்றும் ஏற்றுக்கொள்ளப்படாது.

நாம் எல்லோரும் சேர்ந்து நம்முடைய காணிக்கை பற்றி இப்படிச் சொல்லுவோமாக. “நான் இலவசமாக வாங்கி, என் தேவனாகிய கர்த்தருக்குச் செலுத்தமாட்டேன்” என்று. தாவீது கொடுத்தலைப் பற்றி சரியான மனநிலை உடையவராக இருந் தார். நாமும் அப்படி இருப்போம். நம்மிடத்தில் மிச்ச மீதமுள்ள வைகளை நாம் கர்த்தருக்குக் கொடுத்து, ஒரு போதும் குற்ற வாளிகளாக வேண்டாம். மக்கெதோனியர்களின் உதாரணத் தைப் படித்து அதை உங்கள் வாழ்க்கையில் கடைப்பிடியுங்கள். IIகொரி 2:8-ல் மக்கெதோனிய மக்கள் கொடிய தரித்திரத்தில இருந்தாலும் உதாரத்துவமாய் கர்த்தருக்குக் கொடுத்தார்கள் என்று பார்க்கிறோம்.

புதிய ஏற்பாட்டு கர்த்தருக்குக் காணிக்கை கொடுத்தல் உபதேசம், தேவ திட்டத்தின்படியாகவும், தேவனுடைய எதிர் பார்ப்பின்படியாகவும் மாற நீங்கள் உதவி செய்வீர்களா?

**பா**வத்தின் பரிகாரமாகப் பாரில் அவதரித்த பாலன் இயேசு, பக்குவமாக வளர்ந்த பின், பாவிகளுக்காக பாரச் சிலுவையைத் தன் தோளில் சுமப்பதற்கு முன், ரோமக் காவலர்கள் கருணையின்றி கருணையின் திருஉருவை அடித்து உருக்குலைத்தனர், முள்மகுடத்தைச் சூட்டி மகிழ்ந்தனர், எள்ளி நகைத்தனர், எச்சிலைத் துப்பினர், கொச்சை மொழி பேசி தங்கள் இச்சையை நிறை வேற்றினர், பாசமுள்ள மீட்பரோ, பங்கமுற தனது பிதாவின் சித்தம் நிறைவேற்ற அங்கமெல்லாம் அடிகள் பலவாங்கி, ஊனுடலும் தள்ளாட, உதிரமெலாம் ஆறாக, உலகமீட்பர், ஊர் நடுவே சிலுவை தன் தோள் சுமந்து போகும் காட்சி தனை காணும் போது உள்ளம் பதைக்காதோ! உதிரம் உறையாதோ! நெஞ்சம் தான் வேர்க்காதோ!.

கடந்த மூன்று திங்களாக, மறை நூல் அறிஞர் ஏசாயா யாத்துக் கொடுத்த தீர்க்கதரிசன நூலில், மேசியாவை பற்றிய முன்னுரைகள் எப்படி இயேசுவில் நிறைவேறியது என்று புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் எடுத்துரைத்ததையும், ஏசாயாவைப் பற்றியும், அவர் வடித்துக் கொடுத்த நூலைப் பற்றியுமான பின்னணித் தகவல்களைப் படித்தோம், இவ்விதழில் கர்த்தருடைய தாசன் பற்றி ஏசாயா எழுதின நான்கு பகுதிகளில், முதலாவதைக் கவனிப்போம் வாருங்கள்.

**கர்த்தருடைய தாசனின் பணி - ஏசாயா 42:1-4**

மேற் சொன்ன வசனங்களை நாம் வாசிக்கையில் தேவதாசனின் பணிகளை நாம் அறிந்து கொள்ளலாம். இந்த வசனப் பகுதியை, நமது ஆண்டவரின் ஊழிய நாட்களில் சூம்பின கையையுடைய மனுஷனை சொஸ்தமாக்கின போது அவரில் நிறைவேறியதாக மத்தேயு ஆசிரியர் கூறுகிறார் (மத்தேயு 12:17-24). ஆகவே, ஏசாயா எழுதிய இப்பகுதி நமது ஆண்டவர் இயேசுவைக் குறிக்கிறது என்பதற்கு வேத ஆதாரம் நமக்குண்டு.

முதலாவது, " இதோ, நான் ஆதரிக்கிற என் தாசன், நான் தெரிந்து கொண்டவரும், என் ஆத்துமாவுக்குப் பிரியமானவரும் இவரே... " (ஏசாயா 42:1) என்று எழுதுகிறார். தமது தாசனைக் குறித்து தேவன் இவைகளை கூறுகிறார். " ஆதரிக்கிற " என்கிற வார்த்தைக்கு ஆங்கில வேதம் **"Uphold"** என்கிற வார்த்தை பயன்

படுத்துகிறது. எப்படி ஒரு கட்டடத்தை அதின் தூண்கள் தாங்கிப்பிடிக்கிறதோ, அதைப் போலவே தேவன் தமது தாசனை ஆதரிக்கிறவராக இருக்கிறார்.

"தெரிந்து கொண்டவர்" இதுவே தமது தாசனைப்பற்றி தேவன் சொல்லும் இரண்டாவது பதம். உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்ப்பதற்கு, உலக தோற்றத்திற்கு முன்னமே, தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர் இவரே. (வெளி. 13:8) தேவன், தனது நோக்கத்தை நிறைவேற்ற பல காரியங்களை தெரிந்து கொள்வது உண்டு. எருசலேமை மற்றும் இஸ்ரவேலர்களை தேவன் இப்படியே தெரிந்து கொண்டார் (1இராஜ. 11:32). பழைய ஏற்பாட்டில் தனது பிரசன்னத்திற்காகவும், தனது குமாரனை இவ்வுலகில் கொண்டு வரவும் எருசலேமையும், இஸ்ரவேலர்களையும் தெரிந்து கொண்டார். இன்று கிறிஸ்துவுக்குள் இருக்கும் ஒவ்வொருவரும் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களே (1பேதுரு 2:9).

மூன்றாவதாக, "என் ஆத்துமாவுக்குப் பிரியமானவரும்" என்று தனது தாசனைப் பற்றிக் கூறுகிறார். நமது ஆண்டவர், தனது ஊழியத்தை ஆரம்பிக்கிற நேரத்தில் நீதியை நிறைவேற்ற திருமுழுக்குப் பெற்று கரையேறும் போது, வானம் திறக்கப்பட்டது, தேவ ஆவியானவர் இறங்கினார். பிதாவானவர், "இவர் என்னுடைய நேச குமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன்" என்றார் (மத்தேயு 3:17) இயேசு தனது மரணத்தைப்பற்றி, மோசேயோடும், எலியாவோடும், பரிசுத்த பர்வதத்தில் மறுஉருக்கொண்டு சம்பாஷித்த போது, "...இவரில் பிரியமாயிருக்கிறேன், இவருக்குச் செவி கொடுங்கள்" என்ற சத்தம் வானத்திலிருந்து உண்டானது. (மத்தேயு 17:5).

தேவனுக்குப் பிரியமான அவருடைய தாசனுக்கு நாம் செவி கொடுக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. தேவனே இதை நமக்குச் சொல்லி இருக்கிறார். அவரை நாம் ஏற்றுக் கொள்ளாமலும், அவருடைய வார்த்தைக்கு நாம் செவிகொடாமலுமிருப்போம் என்றால் நாம் நியாயத்தீர்ப்புக்கு தப்பவே முடியாது (யோவான் 12:48). ஆகவே, தேவன் ஆதரிக்கிறவருமாய், தெரிந்து கொள்ளப்பட்டவருமாய், பிரியமாயிருக்கிறவருமான இயேசுவை நாம் ஏற்றுக்கொள்ளுவோம். பரிசேயர்கள், யோவானின் ஞானஸ்நானத்தை ஏற்றுக்கொள்ளாமல், தேவ ஆலோசனையைத் தள்ளினது போல நாமும் இயேசுவைத் தள்ளி நமக்குக் கேடு உண்டாக்க வேண்டாம் என தாழ்மையாகக் கேட்கிறேன். தேவ ஆலோசனையை ஏற்போம் (அப். 2:23)! தேவ ஆசீர்வாதம் பெறுவோம்!!

**(தொடரும்)** **ஜே. பிக்கின்ஸ்**

# கிறிஸ்து சொல்லுகிறபடி நீங்கள் செய்யாமற் போகிறதென்ன?

கிறிஸ்து சொன்னபடி, நான் செய்யாமற் போனது என்ன? என்ற கேள்வி உங்கள் மனதில் எழலாம். காரணம் நீங்கள் தினமும் வேதம் வாசிக்கிறவராகவும், இசைக் கருவிகளை இசைத்து நன்றாக பாடுகிறவராகவும், ஆராதனைக்கும், கூட்டங்களுக்கும் செல்லுகிறவராகவும், தாராளமாக காணிக்கை செலுத்துகிறவராகவும், அனுதினமும் ஆண்டவரே, ஆண்டவரே என்று ஆண்டவரை நோக்கி ஜெபிக்கிறவராகவும் இருக்கலாம். இவைகள் அனைத்தும் எல்லாரும் செய்து வருகின்ற பொதுவான காரியங்களாகக் காணப்படுகிறது. இப்படிப்பட்ட காரியங்களையெல்லாம் செய்ய வேண்டும் என்று நினைக்கிற நீங்கள் கிறிஸ்து சொல்லுகிறபடி நான் எதையாகிலும் செய்யாமலிருக்கிறேனோ என்று எப்பொழுதாவது நினைத்துப் பார்த்ததுண்டா?.

பிரியமானவரே, கிறிஸ்து சொல்லுகிறபடி, நீங்கள் செய்ய வேண்டும் என்பது தேவனுடைய சித்தம். இதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும் என்று பவுல் போதிக்கிறார் (எபே 5:17).

உலகத்தில் பிறந்த ஒவ்வொருவரும் மறுபடியும் பிறக்க வேண்டும் என்று கிறிஸ்து சொல்லுகிறார் (யோ 3:3) இதை கேள்விப்பட்ட மனிதன் இயேசுவை பார்த்து, ஒருவன் தன் தாயின் கர்பத்தில் இரண்டாந்தரம் பிரவேசித்துப் பிறக்க கூடுமோ என்றான். இயேசு அவனுக்கு பிரதியுத்தரமாக; ஒருவன் ஜலத்தினாலும், ஆவியினாலும் பிறக்க வேண்டும் என்பதை அறிந்து கொள்ளும் படி உபதேசித்தார். இயேசு இப்படி சொல்லியிருப்பதை குறித்து அதிசயப்பட வேண்டாம் (யோ 3:3-7) அது தேவனுடைய சித்தம்.

சவுலை இயேசு சந்தித்தபோது அவருடைய சத்தத்தை கேட்ட அவன், ஆண்டவரே நீர் யார் என்றான், அதற்கு கர்த்தர்; நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே என்றார், அதை கேட்ட சவுல் நடுங்கி திகைத்து; ஆண்டவரே நான் என்ன செய்ய சித்தமாயிருக்கிறீர் என்றான் அதற்கு கர்த்தர்; நீ எழுந்து பட்டணத்திற்குள்ளே போ, நீ செய்ய வேண்டியது அங்கே உனக்கு சொல்லப்படும் என்றார். அங்கே சவுல் செய்தது என்ன? அவன் ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டு ஒருவன் மறுப்படியும் பிறக்க வேண்டும் என்ற தேவ சித்தத்தை செய்தான் (அப். 22:6-16).

பிரியமானவரே, உங்களைபோல தேவ பக்தியுள்ளவனும், தன் வீட்டாரோடும் தேவனுக்குப் பயந்தவனுமாயிருந்து ஜனங்களுக்கு மிகுந்த தருமங்களைச் செய்து எப்பொழுதும் தேவனை நோக்கி ஜெபம் பண்ணி கொண்டிருந்த கொர்நேலியு என்ற மனு

ஷரை தேவனுடைய தூதன் சந்தித்து, நீ பேதுரு என்னும் தேவ ஊழியனை அனுப்பி, நீ செய்ய வேண்டியதை உனக்கு சொல்லுவான் என்றான், கொர்நேலியு செய்தது என்ன? அவன் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டு ஒருவன் மறுப்படியும் பிறக்க வேண்டும் என்ற தேவ சித்தத்தை செய்தான் (அப். 10-ம் அதிகாரம்)

எத்தியோப்பிய தேசத்து ராஜஸ்திரியாகிய கந்தாகே என்பவருடைய மந்திரி பிரயாணத்தின்போது வாசித்து கொண்டிருந்த வேத வசனங்களை புரிந்து கொள்ளவும் அவன் செய்ய வேண்டிடியதை அவனுக்கு அறிவிக்கும்படி தேவன் தம்முடைய ஊழியகாரனை அனுப்பினார். மந்திரி செய்ய வேண்டியதை கேள்விப்பட்டவுடன் தண்ணீர் உள்ள ஓரிடத்திற்கு அருகே வந்ததும் இதோ தண்ணீரில் இறங்கி ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டு ஒருவன் மறுபடியும் பிறக்க வேண்டும் என்ற தேவ சித்தத்தை செய்தான் (அப். 8:26-40).

தேவ ஊழியர்களான பவுலும், சீலாவும் அடைக்கப்பட்டிருந்த சிறையில் காவல்காரனாயிருந்தவன் சிறை சாலையில் நடந்த சம்பவத்தை கண்டு பயந்து தன்னை மாய்த்து கொள்ள போன அவனை காப்பாற்றின தேவ ஊழியர்களிடத்தில் இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்ய வேண்டும் என்றான், அப்பொழுது பவுலும், சீலாவும் அவனுக்கும் அவன் வீட்டிலிருந்த யாவருக்கும் கர்த்தருடைய சித்தத்தை போதித்தார்கள். அப்பொழுது இராத்திரியில் அந்த நேரத்தில்தானே அனைவரும் ஞானஸ்நானம் பெற்று கொண்டு ஒருவன் மறுபடியும் பிறக்க வேண்டும் என்ற தேவ சித்தத்தை செய்தார்கள் (அப். 16:23-33).

எருசலேமிலே சுவிசேஷம் முதன் முறையாக பிரசங்கிக்கப்பட்டபோது அதை கேட்டவர்கள் பேருதுவையும் மற்ற அப்போஸ்தலர்களையும் பார்த்து சகோதரரே நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்றார்கள். பேதுரு அவர்களுக்கு தேவனுடைய சித்தத்தை குறித்து சொல்ல அவனுடைய வார்த்தையை சந்தோஷமாய் ஏற்றுக் கொண்டவர்கள் அன்றைய தினம் ஏறக்குறைய 3000 பேர் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டு ஒருவன் மறுபடியும் பிறக்க வேண்டும் என்ற தேவ சித்தத்தை செய்தார்கள் (அப். 2:22-41) அதனை தொடர்ந்து சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்ட இடங்களிளெல்லாம் அதை ஏற்றுக் கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்று கிறிஸ்து சொன்னபடி மறுபடியும் பிறந்தார்கள்.

கிறிஸ்து தம்முடைய சீஷர்களை நோக்கி, நீங்கள் உலகமெங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தை பிரசங்கியுங்கள், விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் அதாவது மறுபடியும் பிறந்தவன் இரட்சிக்கப்படுவான், விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாக தீர்க்கப்படுவான் என்றார் (மாற் 16:15-16).

உலகமெங்குமுள்ள எல்லா மனுஷரும் மறுபடியும் பிறக்க வேண்டும் என்று கிறிஸ்து சொல்லியிருக்கிறார். அவருடைய வார்த்தையை ஏற்றுக் கொண்டவர்கள் மறுபடியும் பிறந்த அனுபவத்தை பெற்றுக் கொண்டார்கள்.

ஒருவன் மறுபடியும் பிறக்கும்படி ஞானஸ்நானம் பெற்று தேவ நீதியை நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதாயிருக்கிறது என்று கூறி இயேசு ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டார். (மத். 3:13-15) எனவே நீங்கள் மறுபடியும் பிறக்க வேண்டும் என்பது எவ்வளவு முக்கியமானது என்பதை தயை கூர்ந்து உணர்ந்து கொள்ளுங்கள்.

நீங்கள் மறுபடியும் பிறக்க வேண்டும் என்று கிறிஸ்து சொன்னதை செய்யாமல் அவரை ஆண்டவரே, ஆண்டவரே என்று சொல்லுகிறவர்களாக இருப்பீர்களானால் கிறிஸ்துவின் வருகையில் நான் சொன்னப்படி நீங்கள் செய்யாமற் போனதென்ன என்று இயேசு கேட்பாரானால் நீங்கள் என்ன சொல்ல போகிறீர்கள்; சிந்தியுங்கள் தேவன் உங்களுக்கு உதவி செய்வார்.

**சகோ. ஹென்றிமோகன்**

## அப்போஸ்தலருடைய நடபடிகளின் கால வரிசைப் பட்டியல்

| | | |
|---|---|---|
| கி.பி. 33 | பெந்தெகொஸ்தே நாள் | அப். 2-ம் அதி. |
| கி.பி. 36 | ஸ்தேவானின் இரத்த சாட்சி | அப். 7-ம் அதி. |
| கி.பி. 37 | பவுலின் மனமாற்றம் | அப். 9-ம அதி. |
| கி.பி. 44 | யாக்கோபின் இரத்த சாட்சி | அப். 12:2 அதி. |
| கி.பி. 44-49 | பவுலின் முதல் நற்செய்திப் பயணம் | அப். 13,14 அதி. |
| கி.பி. 50 | எருசலேமில் அப்போஸ்தல ஆலோசனை | அப். 15-ம் அதி. |
| கி.பி. 51-53 | பவுலின் இரண்டாம் நற்செய்திப் பயணம் | அப். 15,40-18:22 |
| கி.பி. 54-57 | பவுலின் மூன்றாம் நற்செய்திப் பயணம் | அப். 18:23-21:17 |
| கி.பி. 57 | எருசலேமுக்கு பவுலின் கடைசிப் பயணம் | அப். 21:17 |
| கி.பி. 61 | பவுலின் ரோமப் பயணம் | அப். 27-ம் அதி. |
| கி.பி. 61-63 | பவுல் எருசலேமில் சிறைவைக்கப்படுதல் | |

# எனக்குப்பின் சென்று வா

அநேக முறை இயேசு எனக்குப் பின் சென்றுவா என்கிற வெளிப்பாட்டைப் பயன்படுத்தியிருக்கிறார் (லூக்கா 5:27), ஆனால், அவர் சீஷன் என்கிற வார்த்தையையும் அடிக்கடி பயன் படுத்தியிருக்கிறார். கிறிஸ்து எல்லா இனத்து மக்களையும், எல்லா தேசத்து மக்களையும் தம்மை பின்பற்றுகிறவர்களாகவும், தம்மிட மிருந்து கற்றுக்கொள்ள விரும்புவர்களாயிருக்கவும் அழைப்பு விடுக்கிறார். இயேசு இப்படியாகச் சொன்னார் என் பின்னே வாருங்கள்; உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குவேன் (மத்தேயு 4:19). கிறிஸ்தவர்கள் தங்களுடைய அனுதின பாடு களை சுமந்து கொண்டு கிறிஸ்துவைப் பின்பற்ற வேண்டும்.

தேவனுடைய குமாரனைப் பின்பற்றுவதற்கு உண்மையான சீஷத்துவம் அவசியப்படுகிறது (யோவான் 8:30-36). கிறிஸ்த வர்கள் இந்த உலகத்தில் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்றும், தங்களுடைய நித்திய வாழ்விற்காக தயாராவதற்கு என்ன செய்ய வேண்டும் என்றும் இயேசுவிடமிருந்து கற்றுக் கொள்ள வேண்டும் (எபேசியர் 4:17-24). கிறிஸ்தவர்கள் மனுஷ ரைப் பிடிக்கிறவர்களாக இருக்க வேண்டும், அவர்கள் இரட்சிப் பின் சுவிசேஷத்தை தங்கள் அயலகத்தாருக்கும், நண்பர்களுக்கும் எடுத்துச் செல்ல வேண்டும். முதல் நூற்றாண்டு சபை, கிறிஸ்து வின் சீஷர்கள் இயேசுவைப் பின்பற்றி, உபதேசம் பண்ணி, புதிய சீஷர்களை உருவாக்கியதால் தான் வளர்ந்தது. ரோமாபுரியில் இருந்த சபை அறியப்படாதவர்களால் அதே நேரத்தில் உற்சாக மாக இயேசுவைப் பின்பற்றியவர்களால் தான் ஸ்தாபிக்கப் பட்டது.

இயேசுவுக்குப் பின் செல்வது என்பது அவர் மீது நம்பிக்கை வைத்து அவருடைய சித்தத்தை செய்வதாகும். முதலாவது அவருடைய ராஜ்யத்தையும், அவருடைய நீதியையும் தேடும் போது கர்த்தர் நம்மை பலப்படுத்துவார் மத்தேயு 21:22; 6:32-34).

கிறிஸ்தவம் வெறும் மதமாகவோ அல்லது ஒரு தத்துவ ஞானமாகவோ ஒருபோதும் இருக்க முடியாது. கிறிஸ்தவம் ஜீவ மார்க்கமாக இருக்கிறது (ரோமர் 12:1,2) இது கிறிஸ்துவாலும், பவுலாலும், மற்ற அப்போஸ்தலர்களாலும் போதிக்கப்பட்டிருக் கிறது. கிறிஸ்தவம் நம்முடைய அனுதின வாழ்க்கை முறையில் தேவனையும், கிறிஸ்துவையும் மையப்படுத்துகிற ஒரு தெய்வீக அமைப்பாயிருக்கிறது. வார்த்தைகள் நம்முடைய வாழ்க்கையை மாற்றுவதில்லை, ஆனால், கிறிஸ்துவின் உபதேசத்தை நாம்

பின்பற்றும்போது மாற்றம் ஏற்படும். உண்மையில் நம் வாழ்க்கை தொடர் மனந்திரும்புதலை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும், ஏனென்றால், நாம் பாவிகள் என்பதை நம்மால் மறுக்க முடியாது அதனால் நாம் எப்போதுமே தேவனுடைய கிருபையையும், இரக்கத்தையும் சார்ந்திருக்கிறோம் (லூக்கா 13:1-5; மத்தேயு 7:17-27).

ஒரு சீஷன், கர்த்தர் எப்படி இந்த உலகத்தை ஜெயித்தாரோ அதேப்போல தானும் எப்படி இந்த உலகத்தை ஜெயிப்பது என்று கர்த்தரிடமிருந்து கற்றுக்கொள்ளுகிறான். (யோவான் 16:33). சீஷர்கள் பெரும்பாலும் மிகப்பெரிய துன்பங்களையும், சவால்க ளையும் எதிர்கொள்ள வேண்டியதாயிருக்கிறது. கர்த்தர் எப்போதும் நம்மோடிருந்து நம்மை பாதுகாத்து, வழிநடத்தி, ஆறுதல் அளித்து, நமக்கு உதவி செய்கிறார் என்பதை நாம் ஒரு போதும் மறந்து விடக்கூடாது. இயேசு ஒருபோதும் தம்முடைய சகோதரர்களை கைவிடுவதில்லை (எபிரெயர் 4:15,16). தேவனுடைய அன்பிலி ருந்து நம்மை ஒருவராலும் பிரிக்க முடியாது. (ரோமர் 8:38,39).

என் பின்னே வாருங்கள் என்பதன் பொருள் கிறிஸ்துவின் உபதேசத்தைப் பின்பற்றுவதும், வாழ்க்கைக்கும் ஆராதனைக் கும் அவருடைய நிபந்தனைகளை ஏற்றுக்கொள்வதுமாயிருக் கிறது. உண்மையில் கிறிஸ்துவின் சீஷனுடைய ஜீவியம் பிதாவா கிய தேவனையும், இயேசு கிறிஸ்துவையும் மகிமைப்படுத்துகிற தாய் என்றென்றும் தேவனை ஆராதிப்பதாக இருக்க வேண்டும்.


**Hans J. Dederscheck** **Benny Martin**


## தேவனுடைய வார்த்தை பூரணமானது என்பதற்கான ஏழு காரணங்கள்

1. இது பரிசுத்த ஆவியானவரால் கொடுக்கப்பட்டது (யோவான் 14:16)
2. இது நம்மைக் கடைசி நாளில் நியாயந்தீர்க்கும் (யோவான் 12:48)
3. இது ஜீவனுக்கும், தேவ பக்திக்குமான எல்லாவற்றையும் கொண்டுள்ளது (2பேதுரு 1:3)
4. இது குறைவற்றது (சங்கீதம் 19:7)
5. இத்துடன் கூட்ட முடியாது (வெளி 22:18,19)
6. இது கொடுக்கப்பட்ட நோக்கத்தில் முழுமை கொண்டது, இரட்சிப்பை வழங்குகிறது. (ரோமர் 1:14-16).
7. இது ஒருபோதும் ஒழிந்து போகாது (மத்தேயு 5:18)

# BIBLE MEDITATION

## TV PROGRAM



**HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRILANKA**

| LANGUAGE | DAYS | TIME P.M. | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 6.45 - 7.00 a.m. | Box. 3815<br>New Delhi - 110049 | Sunny David |
| TELUGU | Monday<br>to Friday | 5.30 - 5.45 | Box. 80<br>Kakinada - 533 001 | Joshua<br>Gootam |
| TAMIL | Sunday<br>Thursday<br>Friday | 6.45 - 7.00 p.m.<br>5.45 - 6.00 p.m.<br>5.30 - 5.45 p.m. | Box. 8405<br>Bangalore-560 084 | P.R. Swamy |
| MALAYALAM | Friday | 3.45 - 4.00 p.m. | Sunny Meads Lane,<br>Behind Sanskrit<br>College,<br>Trivandrum-695 034 | P.K. Varghee |

Regd. News Paper RNI No. 47661/87- Postal Regn. No. Erode/26/2009-2011
Posted at Erode HPO on 20/21 of Every Month.

# திருமறை ஆசான்

இதழ் ஆசிரியரின்

# திருமறை தியானம்

தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

| | | | | |
|---|---|---|---|---|
| தமிழன் TV | சனி | காலை | 7:15 | மணி |
| இமயம் TV | சனி | மாலை | 7.30 | மணி |
| தமிழன் TV | திங்கள் | காலை | 7:00 | மணி |

# வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம்

- Advanced Bible Correspondence Course -

**பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்க விரும்புபவர்களுக்கு இது ஓர் அரிய வாய்ப்பு.**

ஆம், வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு ஏழு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட **100** பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

விருப்பமுள்ளவர்கள் தபால் செலவுக்கு
ரூ. 100/- மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.

எங்களிடம் ஏற்கனவே அஞ்சல் வழிக்கல்வி BASIC BIBLE COURSE படித்து முடித்தவர்களும், படிப்பவர்களும் இதில் சேர்ந்து பயன்பெறலாம்.

இயக்குனர்

# அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

த.பெ.எண் 27, காங்கேயம் 638 701.
தமிழ்நாடு, இந்தியா.

Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.
Editor : S. Rajanayagam.